அருள் தரும் இமயம்



# திருக்கல்யாணத்தாய்

www.thirukalyanamatha.com




மலர் 4 இதழ் 1 ஜனவரி 2013

தனிச் சுற்றுக்கு மட்டும்

# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 ! 261230
kalyanamatha@gmail.com

ஆசிரியர் & வெளியிடுபவர்
அருட்திரு பபியான் ஜோசப்

ஆலோசகர் குழு
அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட் சகோதரி. புளோரா

ஆசிரியர் குழு
அருட் சகோதரி. லீமா ரோஸ்
திருத்தொண்டர்.டேவிட் வளன்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

விளம்பரம்செய்ய
தொடர்புகொள்ள
04639-261330
04639-261230

தொடர்பு முகவரி
பங்குத் தந்தை
திருக்கல்யாண மாதா ஆலயம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 : 261230

## மலரின் உள்ளே...

| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| உலகத் திருச்சபை செய்திகள் | 2 |
| மறைமாவட்ட செய்திகள் | 3 |
| பங்குச் செய்திகள் | 4 |
| அறிவோம் அன்னையை | 7 |
| அற்புதங்கள்... சாட்சிகள் | 13 |
| முதற் சனி வழிபாடு | 15 |
| வெற்றி வெற்றி வெற்றி | 19 |
| கவிதைச் சோலை | 20 |
| இறைவனுடைய மாதாவே | 30 |
| வாழ்வு தரும் வார்த்தைகள் | 39 |
| குறுக்கெழுத்துப்போட்டி | 40 |

வாங்கிவிட்டீர்களா !


**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருக்கல்யாண அன்னையின் அன்புபிள்ளைகளே புத்தாண்டிலே அடியெடுத்து வைத்திருக்கும் உங்கள் அனைவருக்கும் என் இனிய நல்வாழ்த்துக்களையும் ஆசீரையும் அன்புடன் வழங்குகிறேன்.

இந்த மாத இதழ் திருக்கல்யாண அன்னையின் திருவிழா சிறப்பு மலராக வெளிவருகிறது. இந்த ஆண்டு அன்னையின் 100வது அதிசய தேர்ப்பவனி நடைபெறுவதால் இந்த இதழ் தனிச்சிறப்பைப் பெற்றுள்ளது.

இந்த புத்தாண்டு முழுவதும் அன்னையின் பரிந்துரையால் உங்கள் எல்லோருடைய இல்லங்களிலும் இன்பமும், சமாதானமும்,மகிழ்ச்சியும்,செழிப்பும் பெருகி வளமாக வாழ வாழ்த்துகிறேன்.

தம்மை நோக்கி மன்றாடும் பக்தர்களின் குறைகளை கேட்டு அவர்களுக்கு நல்ல உடல் நலம், செல்வ செழிப்பு, வேலைவாய்ப்பு, திருமணவரம், குழந்தை வரம் ஆகியவற்றை வாரி வழங்கும் நம் அன்னையின் ஆலயத்திருவிழாவிற்கு வருகை தரும் உங்கள் அனைவரையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். வரவேற்கிறேன்.

100வது ஆண்டிலே அன்னையின் அதிசய தேர்ப்பவனி கண் கொள்ளாக் காட்சியாக நம் அனைவரின் இதயங்களிலும் பதிந்துவிடும் என்பதில் ஐயமில்லை. விண்ணுலகமே பூமிக்கு இறங்கி வந்து விட்டதோ என வியக்கும் வண்ணம் அலங்காரத்துடன் ஒளிமயமாக பவனி வரப்போகும் நம் திருக்கல்யாண அன்னையின் ஆசிபெற ஆவலுடன் வருகை தாருங்கள், இந்த ஆண்டின் துவக்கத்திலே நீங்கள் பெறப்போகும் ஆசீர் ஆண்டு முழுவதும் உங்களோடு இருந்து உங்களை வாழ்விக்கும் வழிநடத்தும்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

அன்புடன்

**பங்குத் தந்தை**

பொத்தக்காலன்விளை.



# உலகத் திருச்சபை செய்திகள்

**1. நாசரேத் இயேசு மூன்றாம் பகுதி நவம்பர் 20 வெளிவருகிறது!**

திருத்தந்தை. 16 ஆம் பெனடிக்ட், ஜோசப் ரட்சிங்கர் என்ற தன் இயற்பெயருடன் எழுதியுள்ள நூல்கள் வரிசையில் நாசரேத் இயேசு நூலின் மூன்றாம் பகுதி நவம்பர் 20 ஆம் தேதி வெளியிடப்பட்டது. இயேசுவின் வாழ்க்கையை விவரித்த திருத்தந்தை எழுதியுள்ள இம்மூன்றாம் பகுதி நாசரேத் இயேசு-குழந்தைப் பருவ நிகழ்வுகளின் விளக்கங்கள் என்ற தலைப்புடன் வெளியிடப்பட்டுள்து. இந்த நூல் வத்திக்கானின் கலாச்சார ஆணையத்தின் தலைவர் கர்தினால் ஜியான்பிராங்கோ ரவாசியால் வெளியிடப்பட்டது. இந்நூல் வெளியீட்டு விழா வத்திக்கான செய்தியாளர் பிரட்ரிக்கோ லொம்பார்டி அவர்களால் செய்யப்பட்டது.

**2.ஆசிய ஆயர்கள் புனித பூமிக்கு திருப்பயணம்**

கிறிஸ்தவக் குடும்பம், அயலாருடன் ஒன்றிப்பு, இறைவார்த்தைப் பகிர்வு என்ற பல ஆழமான அனுபவங்களைப் பெறுவதற்கு புனித பூமிக்கு 120 ஆசிய ஆயர்கள் மேற்கொண்ட பயணம் மிகவும் உதவியாக இருந்தது என்று கட்டாக்-புவனேஷ்வர் பேராயர் ஜான் பார்வா கூறியுள்ளார்.


**3. புதிய நற்செய்திப் பணிக்கென இளையோர் தங்களை இன்னும் ஆர்வமாய் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.**

நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் என்ற மையக் கருத்துடன் 2013 ஆம் ஆண்டு சூலை மாதம் பிரேசில் நாட்டின் ரியோடி ஜெனீரோ நகரில் நடைபெறவிருக்கும் அகில உலக இளையோர் மாநாட்டில் அனைத்துலக இளையோரும் ஆர்வமாக கலந்துகொள்ள வாருங்கள் என்றும், புதிய நற்செய்திப் பணிக்கென இளையோர் தங்களை இன்னும் ஆர்வமாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்றும் திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார்.

**4. மனிதர்கள் இயற்கை பரிணாம வளர்ச்சியில் எதேச்சையாக தோன்றிய உயிர்கள் அல்ல.**

மனித உயிர்கள் விலைமதிப்பற்றவை என்ற அடிப்படை உண்மையை வலியுறுத்த கிறிஸ்தவர்களும், பிற மதத்தினரும் ஒன்று சேர்ந்து போர்த்துக்கல் நாட்டில் புறவினத்தார் முற்றம் என்ற கருத்தரங்கை நடத்தினர். இக்கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களுக்கு திருத்தந்தை அனுப்பிய செய்தியில் மனிதர்களாகிய நாம் இயற்கைப் பரிணாம வளர்ச்சியில் எதேச்சையாக தோன்றிய உயிர்கள் அல்ல மாறாக கடவுளின் திட்டத்தில் வகுக்கப்பட்ட உயர்ந்த கொடைகள் என்று குறிப்பிட்டுள்ளார். உலகில் நிலவும் பிரச்சனைகளைக் கண்டு மருளும் மனிதர்கள் இறைவனை உலகினின்று அகற்றும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர் என்று கூறிய திருத்தந்தை, மீண்டும் இறைவனை படைப்பனைத்தின் மையத்திற்குக் கொணர்வதே பிரச்சனை களைத் தீர்க்க சிறந்த வழி என்றும் எடுத்தரைத்துள்ளார். -நன்றி : **நம்வாழ்வு**

# மறை மாவட்ட செய்திகள்



- 2-12-2012 இரத்னபுரம் புனித சவேரியார் ஆலய வெள்ளி விழா மேதகு ஆயர் அவர்கள்தலைமையில்நடைபெற்றது

- 3-12-12 இலங்கநாதபுரம் புதிய ஆலய அர்ச்சிப்பு உறுதி பூசுதல் திருப்பலியும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

- .09-12-12 அன்று காலையில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களும், அன்று மாலை வடக்கன்குளம் ஆலயத்தில் வைத்து தேவசகாயம் பிள்ளை முத்திப்பேறு பட்ட நினைவு திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

- 16-12-2012 அன்று காலை புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் வைத்து வின்செண்டிபால் சபையினரின் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களும், அன்று காலை 10.30 மணிக்கு பொதுநிலையினரின் திருமண வெள்ளிவிழா கொண்டாட்ட திருப்பலியும் அன்று மாலை பொதுக்குழு கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

- .18-12-12 அன்று காலை பழைய காயல் ஆலயத்தில் திருப்பலியும், காலை 10 மணிக்கு மறைமாவட்ட கல்விக்குழு கூட்டமும் அன்று மாலை 4 மணிக்கு மறைமாவட்ட நிதிக்குழு மேதகு ஆயர் அவர்களால் நடைபெற்றது.

- 19.12.12 அன்று மாலை ஆயர் இல்ல பணியாளர்களின் கிறிஸ்மஸ் விழா கொண்டாட்டத்தில் மேதகு ஆயர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

- 21.12.12 அன்று மாலை மங்களகிரி செபக்குழுக்கள் கிறிஸ்மஸ் விழா கொண்டாட்டத்தில் மேதகு ஆயர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

- 22.12.12 அன்று மாலை கடகுளம் பங்கு அதிசயபுரம் ஆலய அர்ச்சிப்பு மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

- 25.12.12 கிறிஸ்மஸ் பெருவிழா கொண்டாட்டங்கள் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

- 26.12.12 அன்று மாலை திரு. இருதயங்களின் பேராலய வளாகத்தில் வைத்து அருட்சகோதரர்.பிராக்ரஸ், அருட்சகோதரர்.பபிஸ்டன்,அருட்சகோதரர் ஆரோக்கிய சூசை லாசர் ஆகிய மூன்று அருட்சகோதரர்களும் மேதகு.ஆயர் அவர்களால் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.

- 28,29,30 ஆகிய நாட்களின் முறையே கொம்பு துறை ஆலய அர்ச்சிப்பும், கூட்டப்பனை பங்கில் உறுதிப்பூசுதல் திருப்பலியும், கிழவநேரி ஆலய அர்ச்சிப்பும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. -நன்றி: **மறைமாவட்ட செய்திகள்**

# பங்குச் செய்திகள்

- 01-12-12 அன்று முதல் சனி நவநாள் வழிபாடுகள் மிகச்சிறப்பாக நடைபெற்றன.
- 02-12-12 அன்று திருவிழா சம்மந்தமான சிறப்பு ஊர்ப்பொதுக்கூட்டம் பங்குத்தந்தை தலைமையில் ஆலய மண்டபத்தில் வைத்து நடைபெற்றது.
- 03-12-12 அன்று கிளைப்பங்கு கொழுந்தட்டு புனித சவேரியார் ஆலய திருவிழா சிறப்பாக நடைபெற்றது.
- 08-12-12 அன்று அமல அன்னை சபை திருவிழாவை முன்னிட்டு அமலோற்பவ மாதா சப்பரப் பவனியும் அதனைத்தொடர்ந்து நவநாள் திருப்பலியும் சபை புதிய உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டார்கள். சபையின் புதிய பொறுப்பாளர்கள் பங்குதந்தையால் நியமிக்கப்பட்டார்கள்<br>தலைவி-விண்மதி, துணைத்தலைவி-கவின் எழிலரசி<br>பொருளாளர்-அமல சிறுமலர், செயலர் நிர்மலா
- 09-12-12 அன்று அமலோற்பவ மாதா சபையின் திருவிழா திருப்பலி பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது.
- 10-12-12 முதல் 15-12-12 வரை மதுரையில் வைத்து மறைமாவட்ட குருக்களுக்கான தியானத்தில் நமது பங்குத்தந்தை அவர்கள் கலந்து கொண்டார்கள்.
- 09-12-12 அன்று காலை திருப்பலி நிறைவு பெற்றவுடன் செபஸ்தியார் நாடகம் குழுவினருக்கு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.
- 14-12-12 புனித தொன்போஸ்கோ இளைஞர் சபையினரின் திருவிழாவிற்காக நவநாள் ஆரம்பமாகிறது.
- 21-12-12 அன்று திருக்குடும்ப சபை திருவிழா நவநாள் ஆரம்பிக்கப்பட்டது. அன்று மாலை ஒப்புரவு அருட்சாதன திருப்பலி நடைபெற்றது. அதில் பங்கு மக்கள் கலந்து கொண்டு கிறிஸ்துவின் வருகைக்காக தங்களைத் தயாரித்தார்கள்.
- 22-12-12 புனித தொன்போஸ்கோ சபை திருவிழாவை முன்னிட்டு சப்பரப் பவனியும் அதனைத்தொடர்ந்து நவநாள் திருப்பலியும் நடைபெற்றது. சபையின் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள். தலைவர்-S.ராஜேந்திர பாபு, துணை தலைவர்- J.அந்தோணி சூசைராஜ், செயலாளர்-A.சேசு இளையராஜா, பொருளாளர் -V.ஜெகதீஷ்
- 23.12.12. அன்று புனித தொன்போஸ்கோ சபைத் திருவிழா திருப்பலி நடைபெற்றது.
- 24-12-12 அன்று நள்ளிரவு கிறிஸ்மஸ் பெருவிழா திருப்பலி மிகச்சிறப்பாக நடைபெற்றது. பங்குத்தந்தையும், பங்குமக்களும் கிறிஸ்மஸ் வாழ்த்தை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார்கள். கோயில் வளாகத்தில் மிகப்பிரமாண்டமான முறையில் அனைவரும் வியக்கும் வண்ணம் கிறிஸ்துமஸ் குடில் அமைக்கப்பட்டது. கோயில் உள்ளேயும் பாரம்பரிய முறையில் குடில் அமைக்கப்பட்டிருந்தது.
- 25-12-12 அன்று மாலை ஆராதனை முடிந்தவுடன் கோயில் மண்டபத்தில் வைத்து டொன்போஸ்கோ சபையினரால் கிறிஸ்துமஸ் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. கிறிஸ்துமஸ் கனி பரிசுகளாக முதற்பரிசு வாஷிங்மெஷின்,

இரண்டாம் பரிசு கிரைண்டர், மூன்றாம் பரிசு சார்ஜர் பேன் மேலும் சில்வர் குடம், சில்வர் குத்துபோனிகள், வாளிகள் என மொத்தம் 1300 பரிசுகள் வழங்கப்பட்டன.
கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு குடில் போட்டிகள் நடைபெற்றது. குடில் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.
கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு நமது ஊர் புனித டொன்போஸ்கோ இளைஞர்கள் கேரல்சர்விஸ் நடத்தி மக்களை மகிழ்வித்தார்கள்.
பல்வேறு பரிசுகளை பெற்று மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள், அனைத்து ஏற்பாடுகளையும் பங்குதந்தை தலைமையில் நமது ஊர் டொன்போஸ்கோ இளைஞர் சபையினர் மிகச்சிறப்பாக செய்தார்கள்.

- 26-12-12 அன்று நமது பங்கில் கடந்த ஓராண்டாக பணியாற்றிய திருத்தொண்டர் பபிஸ்டன் அவர்கள் நமது ஆயர் மேதகு இவோன் அம்புரோஸ் அவர்களால் தூத்துக்குடி திரு இருதயங்கள் பேராலயத்தில் வைத்து குருவாக திருநிலை படுத்தபட்டார்கள். இதில் நமது பங்குதந்தை தலைமையில் நமது ஊர் பொது மக்கள் பெருவாரியாக இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்

- 29-12-12 அன்று திருக்குடும்ப சபையார் திருவிழாவை முன்னிட்டு சப்பரப்பவனி நடைபெற்றது. அதன்பின் நடைபெற்ற நவநாள் திருப்பலியில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள்.

  புதிய பொறுப்பாளர்கள் : தலைவி – **J.**யூதாததேயு நிர்மலா, உபதலைவி – **A.**மரிய ஜாக்குலின், செயலர் – **S.**மேரிலீலா, பொருளாளர் – **R.**எஸ்தர் கிறிஸ்டி

- 30-12-12 அன்று பரிசுத்த திருக்குடும்ப சபைத்திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

- 31-12-12 அன்று நள்ளிரவில் புத்தாண்டு திருப்பலி சிறப்பாக நடைபெற்றது. பங்குதந்தையும், பங்குமக்களும் உறவின் புத்தாண்டு வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சி அடைந்தார்கள்

**- பங்குத்தந்தை**

## கிளைப்பங்கு கொழுந்தட்டு புனித சவேரியார் ஆலய திருவிழா (03.12.12) அன்று புதுநன்மை வாங்கியவர்கள்

| | |
|---|---|
| 1.ரா.லெனின் பிரபாகரன் | 9.ஞா.பிரான்சிஸ் மெபிசா |
| 2.ஜா.சேகர் அஜய் | 10.செ.சகாய அஸ்வினி |
| 3.ஜ.ருபேஸ் வின்செண்ட் ராஜ் | 11.அ.ஜெனுஷா மேரி |
| 4.அ.பிரான்சிஸ் வெஸ்லின் | 12.ம.சந்தன இதிஷா |
| 5.அ.கவிதா | 13.ம.ஜொான் |
| 6.ஆ.ஜெனிபா | 14.ச.ஸ்பெனிட்டா ஷேரன் |
| 7.அ.பிரான்சிஸ் சௌமியா | 15.தா.ஜெனிபர் மோனிஷா |
| 8.அ.செல்வ நான்சி | 16.ஜெ.ஜெனோ சில்வியா |

## அனைவருக்கும் திருக்கல்யாணத்தாய் திருத்தல 100வது தேர்த்திருவிழா

# வாழ்த்துக்கள்!



“எண்ணம் அழகானால் எல்லாம் அழகாகும்”

## என்றும் மக்கள் பணியில்...

**சூ. மரிய அந்தோணி ஜார்ஜ் M.Sc.,M.Phil.,LLB.,**

பஞ்சாயத்துத் தலைவர்,
சாஸ்தாவிநல்லூர் ஊராட்சி,
பொத்தக்காலன்விளை.

CSC
COMPUTER SOFTWARE COLLEGE
An ISO 9001 : 2008 Certified Institution

சிறந்த கம்ப்யூட்டர் கல்விக்கு,

**CSC Computer Education,**
Main Road,
Sathankulam 628 704
Ph: 04639-267284, 266643

# அறிவோம் அன்னையை!



- புனிதர்கள் பெர்னாடு, லிகோரி, பீட்டர் தாமின், பெனவெஞ்சர் ஆகியோர் மரியன்னையின் மறைவல்லுநர்கள் ஆவர்.

- நான் முற்றும் உம்முடையவன், என்னுடையதெல்லாம் உம்முடையதே, எல்லாவற்றிற்கும் நீரே என் வழித்துணையாக இருப்பாயாக என்று திருத்தந்தை 2-ஆம் அருள் சின்னப்பர் மரியன்னையின் பக்தியை கொண்டிருந்தார்.

- திருத்தந்தை 5-ஆம் பத்திநாதர் சகாய அன்னையின் பக்தியை வளர்த்த திருத்தந்தை ஆவார்.

- ஜெபமாலையை நீ நன்றாக சொன்னால், செபங்களில் அதுவே சிறந்த ஜெபமாகும் என்று புனித பிரான்சிஸ்க்கு சலேசியார் கூறுகிறார்.

- மங்கள வார்த்தை ஜெபமே மரியன்னையை மகிழ்விக்கும் சிறந்த ஜெபம் ஆகும். 1954ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் நாள் அன்னை மரியாள் விண்ணக - மண்ணக அரசியாக திருச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்டார்.

- திருத்தந்தை 5ம் பத்திநாதரால் 1953ம் ஆண்டு திருச்ஜெபமாலையின் திருநாள் ஆரம்பிக்கப்பட்டது.

- பெல்ஜியம் தேவ அன்னையை தங்க இருதயத்திற்கு ஒப்பிட்டு வணங்கும் நாடு ஆகும்.

- திருத்தந்தை 13ஆம் சிங்கராயர் அக்டோபர் மாதத்தை ஜெபமாலை மாதமாக அறிவித்தவர் ஆவார்.

- கிறிஸ்தவர்களின் சகாய அன்னையே ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் பாது காவலி ஆவார்.

– **ஜெ. ஜெனி,** பொற்பை

## எண்ணங்களை மேம்படுத்துங்கள்

- ஒவ்வொரு நொடி தாமதமும் ஒரு கோடி ரூபாய் இழப்பிற்கு சமானம்

- அனுபவம் என்பது வேறொன்றுமில்லை எல்லாம் இழந்த பின் எஞ்சி நிற்பதே ஆனால் இழந்ததை விட கிடைத்த அனுபவம் பெரிது.

- எவன் ஒருவனுக்கு அடுத்தவேளை உணவு ஊர்ஜிதமாகிறதோ அவன் உழைக்கும் திறனை இழக்கிறான்.

- நீ எந்த அளவிற்கு அடுத்தவனை சார்ந்து இருக்கிறாயோ அதைவிட அதிகமாகவே அவன் உன்னை ஆளுமை செய்கிறான்.

- நீ எதுவாக மாறவேண்டும் என நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்-உன் எண்ணம் உண்மையாய் இருந்தால்

– **ஜெயக்கொடி** – பொற்பை




# நன்றிகள் பலகோடிகள்
# 01.12.2012 முதல்சனி உணவு
# நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| சுவாமிநாதன் – பொற்றை | 500.00 |
| அந்தோணி செல்வன் ரஜீலா–சாத்தான்குளம் | 500.00 |
| குறிப்பிட்ட நபர், பொற்றை | 501.00 |
| ஆஷா ஷைனி, தென்திருப்பேரை | 500.00 |
| எட்வர்ட் லாரன்ஸ் ஜாண்மேரி (பொற்றை) | 300.00 |
| குறிப்பிட்ட நபர் – பெரியதாழை | 1000.00 |
| சிலுவை அந்தோணி கனி (பொற்றை) | 501.00 |
| சகாய சேவியர் – பொள்ளாச்சி | 300.00 |
| அந்தோணிமுத்து (சென்னை) | 1000.00 |
| குறிப்பிட்ட நபர் – பொற்றை | 200.00 |
| ஜேசுதுரை –பொற்றை | 1000.00 |
| அனிஸ்மெஸ் –பொள்ளாச்சி | 150.00 |
| ராஜேந்திரன் | 110.00 |
| லூக்காஸ் மளிகை –திருப்பூர் | 1000.00 |
| ராஜன் | 500.00 |
| தாஸ் – அழகப்பபுரம் | 1000.00 |
| அந்தோணிராஜ் – பொற்றை | 500.00 |
| செந்தில் – குளித்துறை | 101.00 |
| மரியசெல்வி – கொம்புத்துறை | 1000.00 |
| அன்றன் – கூட்டப்பனை | 101.00 |
| ஜெனரிஷ் – கொல்லம் | 200.00 |
| ஜார்ஜ் – கூடுதாழை | 100.00 |
| ரமேஷ் அகிலா – களியக்காவிளை | 1000.00 |
| ரோசாரி அந்தோணி பிச்சை – இணையம் | 500.00 |
| பெர்னத் சேலிஸ் – இணையம் | 1000.00 |
| பென்சிகர் – ஹெலன்நகர் | 200.00 |
| ரவி ஹெலன் | 500.00 |
| ஜிஜி – திருவனந்தபுரம் | 100.00 |
| தாமஸ் – திருவனந்தபுரம் | 100.00 |
| டொன்போஸ்கோ – ராஜாவூர் | 500.00 |
| மைக்கிள் பென்சி – ராஜாவூர் | 500.00 |
| குறிப்பிட்ட நபர் | 1000.00 |
| விஜயன் பெர்னத்மேல் – வள்ளிளை | 100.00 |
| சந்தனசிலுவை – கவரப்பேட்டை | 500.00 |
| சகாய லூர்து மேரி – கவரப்பேட்டை | 500.00 |
| அன்றன் தாமஸ் – சின்னமுட்டம் | 1000.00 |

| | |
|---|---|
| அலெக்ஸ் ஜமால், பூந்துறை | 500.00 |
| லியோன்– இடிந்தகரை | 500.00 |
| மேரி ஜெயா – குறும்பனை | 400.00 |
| ரீன் மேரி –மேலமிடாலம் | 500.00 |
| முருகேஷன் – நரையன்குடியிருப்பு | 1000.00 |
| சுரேஷ்பாண்டியன் – பொற்பை | 100.00 |
| கல்யாணமாதா பிளைவுட் – வள்ளிவளை | 100.00 |
| லியோன் – கோவளம் | 1000.00 |
| மணவை பக்தர்கள் – மணப்பாடு | 1250.00 |
| ஜாண்சன் கோஸ்தா – கூட்டப்புளி | 500.00 |
| பிரைளசிங் – நாகர்கோவில் | 1000.00 |
| ஷைனி – தென்திருப்பேரை | 500.00 |
| லீலா – தளவாய்புரம் | 100.00 |
| நேன்சி அன்றோ ஜெரோம் தாஸ் | 500.00 |
| ரென்னிஸ் பியூட்டி வேல்டு – நாகர்கோவில் | 3000.00 |
| மாரல் மந்தோ ரியல் எஸ்டேட் – நாகர்கோவில் | 1200.00 |
| சகாய மைக்கிள் ராஜா | 21500.00 |
| ஸடீபன் – ஏரல் | 1000.00 |
| ஜஸ்டின் வெண்ணிலா – குளச்சல் | 300.00 |
| செல்வகணேசன் – செல்வசரோஜா | 100.00 |
| மொத்தம் | 53614.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| எட்வின் காமராஜ் டெய்சி குடும்பத்தினர் | – 10000 சாப்பாடு பிளேட் |
| அன்னையின் அடிமை – பொற்பை | – பீடபூக்கள் |
| பாக்கியம், பொற்பை | – வாழைத்தார் –1 |
| குறிப்பிட்ட நபர் (பொற்பை) | – தேங்காய் 62 |
| சேவியர் – பொற்பை | – வாழைத்தார் 2 |
| அருள் சேவியர் – பொற்பை | – தேங்காய் 21 |
| குறிப்பிட்ட நபர் – பொற்பை | – அரிசி 300 கி |
| குறிப்பிட்ட நபர் – பொற்பை | – அரிசி 100 கி |
| தேவதாசன் – பொற்பை | – அரிசி 100கி |
| MSR.ஜஸ்டின் – பொற்பை | – அரிசி 100கி |
| ரைமண்ட் மேரி சலோமி – குளச்சல் | – அரிசி 25கி |
| ராஜேஷ் அமலா –பொற்பை | – அரிசி 50கி |
| லீமா ஞானம் – மலேசியா | – அரிசி 50கி |
| சைமன் ஜெகதீஷ் –மூகாம்பிகை | – அரிசி 50கி |
| சூசைமிக்கேல் (கோவை) | – அரிசி 50கிலோ |
| ரூபி ஸ்டோர் | – அரிசி 50கிலோ |
| ஜெயசந்திரன் – கோயம்பேடு | – முள்ளங்கி 1மூடை, ம.பூசணி 1 மூடை |
| நீலகிரி டிரேடர்ஸ் – கோயம்பேடு | – வெங்காயம் 2 மூடை |
| SRT கோயம்பேடு | – உருளை 2 மூடை |
| A.T ஈஸ்வரன் – கோயம்பேடு | – தக்காளி 8 பெட்டி |
| சுரேஷ் – கோயம்பேடு | – பீன்ஸ் 30 கி |

| | | |
|---|---|---|
| ரவீஸ்டர் – பொற்பை | – | சி.வெங்காயம் 35கி,கேரட் 40கி |
| | – | ப.மிளகாய் 1மூடை,சேனை 1மூடை |
| துரை – கோயம்பேடு | – | மாங்காய் 10 கி |
| குறிப்பிட் ட நபர் – பொற்பை | – | வாழைத்தார் 5 |
| கிருஷ்ணன் ,ஆனந்த செல்வி –தண்டையார்குளம் | – | 1 கிடா |
| சேசுராஜ்–சுகிர்தா – தூத்துக்குடி | – | அரிசி 50கி |
| வருவேல் –கீழ்மணக்குடி | – | அரிசி 25கி |
| ராபர்ட் – ஷைனி – வள்ளிவிளை | – | அரிசி 25 கி |
| சித்திரைராஜ் – உடன்குடி | – | அரிசி 25கி |
| கென்னடி – முட்டம் | – | அரிசி 50கி |
| சேவியர் – நாகர்கோவில் | – | தேங்காய் 20 |

எட்வின் காமராஜ்,டெய்சி ராணி குடும்பம் முதல் சனி டி.வி விளம்பர உபயம்


**முதற்சனி மதிய உணவு செலவு விபரம் : (03.11.2012)**

| | |
|---|---|
| சமையல் யோவான் | 11000.00 |
| S.மரியதுரை 4 பணியாளர் | 800.00 |
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| தூய யோவான் ஆலய பாத்திர வாடகை | 200.00 |
| சுப்பையா துப்பரவு பணி | 1000.00 |
| ரூபி ஸ்டோர் Y.இருதயராஜ், 41/2 மூடை அரிசி | 15300.00 |
| வின்செண்ட் உணவு விடுதி | 1239.00 |
| S.ஜாண் ஸ்டீபன் ராஜ் வண்டி வாடகை | 250.00 |
| S.ஜஸ்டின் மின்னல் 105 மூடை தண்ணீர் | 5460.00 |
| இம்மானுவேல் வண்டி 8 நடை & தண்ணீர் 1 நடை | 1100.00 |
| S.அலெக்ஸ் பச்சை விறகு 2 டன் பட்ட விறகு 10 எடை | 7400.00 |
| பேச்சியம்மாள் துப்பரவு பணி | 500.00 |
| ஜெயக்குமார் வண்டி வாடகை | 600.00 |
| தேவ அமிர்தராணி செங்கல் 100 | 600.00 |
| திருக்கல்யாணி ஒலி,ஒளி அமைப்பு | 400.00 |
| சென்னை காய்கறி பஸ் செலவு | 700.00 |
| பாஸ்கர் மளிகை | 55658.00 |
| மொத்தம் | 1,02,607.00 |

| | |
|---|---|
| முன்னிருப்பு வங்கியில் | 105894.00 |
| நன்கொடை மூலம் வரவு | 53614.00 |
| முதற்சனி மீதி பொருட்கள் ஏல வரவு | 14010.00 |
| ஜோஸ் குடும்பத்தினர் வங்கியில் | 3000.00 |
| மொத்தம் | 176518.00 |
| 01.12.12 முதல் சனி செலவு | 102607.00 |
| இறுதி இருப்பு | 73911.00 |

| | |
|---|---|
| வங்கியில் | 73903.00 |
| கையில் | 8.00 |
| இறுதி இருப்பு | 73911.00 |

# நமது வாழ்வில்
# அன்றாடம் ஜெபிக்க வேண்டிய
# புனித சூசையப்பர் ஜெபம்



புனித சூசையப்பரே!
உமது அடைக்கலம மகத்தானது!
வல்லமைமிக்கது!
இறைவனின் சன்னதியில் உடனடி
பலனளிக்கவல்லது.
எனவே என் ஆசைகளையும்,
எண்ணங்களையும்
உமது சன்னதியில் வைக்கிறேன்.
(நமது தேவைகளை வேண்டவும்)
உமது வல்லமைமிக்க பரிந்துரையால்
உம் திருமகனும் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவிடம்
எல்லா ஆன்ம நலன்களும் பெற்றுத்தாரும்
இதன்வழியாக மறு உலகில் உமக்குள்ள
ஆற்றலை போற்றி எல்லாம் வல்ல
தந்தையாகிய இறைவனுக்கு நன்றியும்
ஆராதனையும் செலுத்தக்கடவேன்.
புனித சூசையப்பரே, உம்மையும்
உம் திருக்கரங்களில் உறங்கும் இயேசுவையும்
சதாகாலமும் எண்ணி பூரிப்படைய தயங்கியதில்லை.
இறைவன் உம் மார்பில் சாய்ந்து தூங்கும் வேளையில்
அவரை தொந்தரவு செய்ய விரும்பவில்லை.
உம்மார்போடு என்பொருட்டு அவரை
இணைத்து அணைத்துக் கொள்ளும்.
என் பெயரால் அவர் நெற்றியில் முத்தமிடும்.
நான் இறக்கும் தருணத்தில் அந்த முத்தத்தை
எனக்குத் தரும்படி கூறும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்ம காவலனே!
எங்களுக்காக மன்றாடும். - ஆமென்.
[இந்த ஜெபத்தை தினமும் பக்தியுடன் ஜெபித்தால்
அகால மரணம் நம்மை நெருங்காது. எல்லா
நலன்களும் நமக்கு கிடைக்கும்]


இவண்

**சூ. மரிய அந்தோணி ஜார்ஜ்** M.Sc.,M.Phil.,LLB.,

பஞ்சாயத்து தலைவர்.

**Cell: 9443529135**

Advt.

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் : 04639-261230 , 261330**

**நவம்பர் 2012 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | ! | 1338பேர் |
| குழந்தைபாக்கியம் | ! | 1121 பேர் |
| சுகப்பிரசவம் | ! | 813 பேர் |
| நற்சுகம்பெற | ! | 1653 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | ! | 1146 பேர் |
| தேவஅழைத்தல் | ! | 866 பேர் |
| வேலைகிடைக்க | ! | 1446 பேர் |
| தொழில்முன்னேற்றம் | ! | 2025 பேர் |
| குடும்பசமாதானம் | ! | 2186 பேர் |
| குடும்பநலன் | ! | 1697 பேர் |
| உறவினர்நன்மைக்காக | ! | 1597 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | ! | 1797 பேர் |
| அலகைதொல்லைதீர | ! | 1180 பேர் |
| மனஅமைதிக்காக | ! | 1680 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | ! | 610 பேர் |
| மனமாற்றமடைய | ! | 1101 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | ! | 1195 பேர் |
| நல்லஇல்லம்அமைய | ! | 1406 பேர் |
| சோதனைகளைவெல்ல | ! | 1404 பேர் |
| கடன்தொல்லைதீர | ! | 1769 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | ! | 717 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**- பங்குத்தந்தை**

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

## அதிசய தேர் பவனி

தேரில் பவனிவரும் மாதா –எங்கள்
திருக்கல்யாணமாதா – எங்கும் என்றும்
இருப்பார்,நம் வாழ்க்கையின் ஒளியாய்
– இருப்பார்
100வது தேர்பவனி அதிசயம் – அது
1000 தலைமுறை பேசும் இரகசியம்
– என்றும் என்றும்
திருக்கல்யாண மாதாவின் அதிசயம் –
அது எண்ண இயலாத அதிசயம்
என்றும் என்றும் வாழும் மாதா – எங்கள்
திருக்கல்யாணமாதா!

*அ.அன்றோ சரோஜினி –செங்கல்பட்டு*

## சிந்தனைக்கு...

1.மனிதப் பிறிவியின் லட்சியம் இறைவனை அடைவதே.நாம் இந்த இலட்சியத்தில உறுதியுடன் இருக்கவேண்டும்.

2.அறிவோடு வாழ்பவன் ஆரோக்கியத்துடன் வாழ்வோன்.

–M. ஜெப ஆஷா
வெள்ளக்கோவில்

# திருவிழா நல்வாழ்த்துக்கள்



## சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச் சங்கம்

பதிவு எண் [illegible]

10, நேரு நகர், அரும்பாக்கம்,

சென்னை - 106

போன் : 044 - 23635688

# திருக்கல்யாண மாதா
# திருவிழா நல்வாழ்த்துக்கள்!



**A.V.M. GROUPS - 94442 16566**

**A.V.M. STORES - 2792 5254**

**A.V.M. HARDWARES - 94442 16566**

**MATHA STORES - 2792 5698**

**A.V.M. WATER SUPPLY - 27925632**

**OFFICE :**

A.V.M BUILDINGS
G.N.T. ROAD, KAVERA PETTAI

PROPRIETOR :-

**D.DASAN & BROS**

**D.DASAN & SONS**




# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1.தேவ அழைத்தலுக்கு நன்றி ! - **அந்தோணி சேவியர்,**மணப்பாடு
2.நல்ல இல்லம் அமைத்தமைக்கு நன்றி! **ஜினத் மேரி**-ஆரோக்கியபுரம்
3.கடன்தொல்லை தீர்ந்தமைக்கு நன்றி! - **தீமேத்தியூ**-மணப்பாடு
4.சோதனைகளை வென்றதற்கு நன்றி! -**மெர்ஸிரோஸ்லின்** - மூகாம்பிகைநகர்
5.தேர்வில் வெற்றி பெற்றமைக்கு நன்றி! **செல்வி**-மணப்பாடு
6.வழக்கில் வெற்றி பெற்றமைக்கு நன்றி ! **ஜெரி சால்டானா** -மும்பை
7.வழக்கில் வெற்றி பெற்றமைக்கு நன்றி ! **மரிய விமலா**-குலசேகரம்
8.வேலை கிடைத்தமைக்கு நன்றி! **மதன்**-மணப்பாடு
9.கடன் தொல்லை தீர்ந்தமைக்கு நன்றி! **ராஜ் வசந்தி**,கோடிமுனை
10.தேர்வில் வெற்றி பெற்றமைக்கு நன்றி! **ஜோஸ்பின்**-விக்கிரமசிங்கபுரம்
11.வேலை கிடைத்தமைக்கு நன்றி! **அன்றனிடிட்டோ**,தூத்துக்குடி
12.குழந்தை பாக்கியம் கிடைத்தமைக்கும்,சுகபிரசவத்திற்கும் நன்றி
**எட்வின் பாஸ்கர் ஜாக்குலின்**,சொக்கன்குடியிருப்பு
13.வேலை கிடைத்தமைக்கு நன்றி! **தேவபலன்**-நவமுதலூர்
14.கடன் தொல்லை தீர்ந்தமைக்கு நன்றி! **ஜெசுதுரைமேரி**-கடகுளம்
15.திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி!- **சுமிதா**-உதிரமாடன்குடியிருப்பு
16.தேர்வில் வெற்றி பெற்றமைக்கு நன்றி! **தர்ஷன்**-தூத்துக்குடி
17.நல்ல இல்லம் அமைந்தமைக்கு நன்றி, **ஞானபிரகாஷ்**-சூலத்தாழை
18.குழந்தைபாக்கியம் கிடைத்தமைக்கு நன்றி! **விஜய்சிந்து**-உவரி
19.குழந்தைபாக்கியம் கிடைத்தமைக்கு நன்றி.**அந்தோணிமுத்து** - உவரி
20.மனமாற்றம் அடைந்ததற்கு நன்றி **ராஜு**-பெரியதாழை
21.திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி! **சுதா**-சங்கரன்குடியிருப்பு
22.திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி! **ஜூலியன் சங்கீதா**-மணப்பாடு
23.குழந்தைபாக்கியம் கிடைத்தமைக்கு நன்றி. **நிஷா ஜூடு**,கூட்டப்புளி
24.தொழில் முன்னேற்றத்திற்கு நன்றி! **ராஜேந்திரன்** - பொற்பை
25.அலகை தொல்லை தீர்ந்தமைக்கு நன்றி! - **செல்வசுதா**
26.குடிபழக்கத்திலிருந்து விடுபட்டமைக்கு நன்றி! **கொர்னலிஸ்**-உவரி
27.வேலை கிடைத்தமைக்கு நன்றி! **ஜெயந்தி கில்டா**
28.அறுவைசிகிச்சை வெற்றிபெற்றமைக்கு நன்றி!. **ராஜேஷ்**-மீனம்பட்டி
29.வீடு தந்தமைக்கு நனறி! - **மேரி ஸ்டெல்லா**-திற்பரப்பு
30.நற்சுகம் பெற்றமைக்கு நன்றி, **ஜோன் ஜூலிபாய்,** மார்த்தாண்டம் துறை
31.மருமகளுக்கு ஆசிரியர் தகுதித்தேர்வில் வெற்றி பெற்று வேலை கிடைத்தமைக்கு நன்றி. **புஷ்பமணி ராஜேந்திரன்.**Tr, நெடுங்குளம்

*– பங்குத்தந்தை*

# பிறந்த நாள் வாழ்த்து



## A.சகாய ரோஸ்லின்

வாழ்த்தும் அன்பு நெஞ்சங்கள்...

அப்பா : **அந்தோணி ஜெய பிரபு**
அம்மா : **மேரி ஜெய பிரதா**

ஞானபெற்றோர்:
**மரிய ராஜேஷ் ராஜா – ஜெனிபர்**

அண்ணன்: **பிரிட்டோ**
மற்றும்
தாத்தா பாட்டி,
உற்றார்,உறவினர்

# முதல் சனி வழிபாடு (1.12.2012)



திருக்கல்யாண மாதா திருத்தலத்தில்

டிசம்பர் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 01.12.2012 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு. **ஜெகதீஷ்** அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், மலையாள மொழியில் நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துக்கள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. பேரருட்திரு. **மரியதாஸ்,** அடிகளார், தலைமையில் பங்குத் தந்தை அருட்திரு.**பபியான் ஜோசப்,** அருட்திரு. **பீட்டர் ராஜா**, அருட்திரு.**ஜெகதீஷ்**. அருட்திரு. **டொம்னிக்,** அருட்திரு. **பங்கிராஸ்,** அருட்திரு. **ஜஸ்டின்,**அருட்திரு.**சகாயராஜ்** அருட்திரு.**ஜெரால்டு**, அருட்திரு.**பாஸ்டியன்**, அருட்திரு **போஸ்கோ**, அருட்திரு.**அகிலன்,** திருத்தொண்டர் **பபிஸ்டன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு. **ஜஸ்டின்** அடிகளார் மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து **350** வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **15,000** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், மோர் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறை இரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதை அருட்திரு. **ஜெகதீஷ்** அடிகளார் வழி நடத்தினார்கள். அதன்பின்பு பங்குத் தந்தை தலைமையில் திருப்பலி நடைபெற்றது.

– **பங்குத்தந்தை**

## 2013-ம் வருட திருக்கல்யாண அன்னையின் திருத்தல 100-வது தேரோட்ட பெருவிழா சிறப்பு ஊர்பொதுக்கூட்டம்

02.12.2012 காலை 10.30 மணிக்கு பங்குத்தந்தை அருட்திரு.**பபியான் ஜோசப்** அடிகளார் தலைமையில் ஊர்ப் பொதுக்கூட்டம் துவங்கியது.

## 14.01.2013 திருத்தல பெருவிழா கொடியேற்றம்

**தீர்மானங்கள்:**

**வரிபோடுதல் :** திருவிழா வரி ரூ 1250/- (ஆயிரத்துஇருநூற்று ஐம்பது மட்டும்)

***திருவிழா பணிக்குழுக்கள்***

***வரிபிரிக்கும் குழு***

**வடக்குத்தெரு**
திரு.**அருள்** தலைமையில் குழு

**தெற்கு தெரு**
திரு.**ஜேம்ஸ்** தலைமையில் குழு

**தேர்க்குழு & கொடிமர குழு**

**பணிகள்**
கொடியேற்றம்
தேர்ப்பவனி, மைக்
தேர் அலங்காரம்
வாணவேடிக்கை
நற்கருணை பவனி

1.திரு.**பிரான்சிஸ் தேவராஜ்** (தலைவர்)
2.திரு.**அமல்ராஜ்**
3. திரு.**அந்தோணி ஜெயராஜ்**
4.திரு.**லூர்து மணி**
5. திரு. **அந்தோணி குரூஸ்**
6.திரு.**பிரபு**

**உணவுக்குழு**

**பணிகள்**
மேளகாரர் சாப்பாடு
திருவிழா விருந்து
காவல்துறை சாப்பாடு

1.திரு.**காமராஜ்** (தலைவர்) 2.திரு. **சேவியர்**
3.திரு.**ஜேம்ஸ** 4.திரு.**டோம்னிக் ராஜன்**
5. திரு.**இருதயராஜ்** 6.திரு.**ஜார்ஜ்**
7.திரு.**ஜெயசீலன்** 8.திரு.**ரவீஸ்டர்**
9.திரு.**எட்வர்ட் லாரன்ஸ்**

**டீசல் குழு**

**பணிகள்**
ஒலி,ஒளி டீசல் வாங்குதல்
டவர்

1.திரு.**சேவியர்** (தலைவர்) 2.திரு.**பிரபு**
3.திரு.**அமலதாசன்** 4.திரு.**காமராஜ்**

**போலீஸ் – எலெக்ட்ரிக்–டெலிபோன் குழு**

1.திரு.S.M.A.**ஜார்ஜ்** (தலைவர்)
2.திரு.**ஜெயசீலன்**

## அமைதிக்குழு

| | |
|---|---|
| கலைநிகழ்ச்சி<br>மற்றும்<br>ஆலய நிகழ்வுகள் | 1.திரு.**சிங்கராயன்** (தலைவர்)<br>2.திரு.**ஜெயராஜ்**<br>3.திரு.**ராஜேந்திரன்**<br>4.திரு.**ஸ்டாலின்**<br>மற்றும்<br>புனித வின்சென்ட்–தே–பவுல் சபை<br>+<br>டோன் போஸ்கோ இளைஞர்கள் |

## செபஸ்தியார் நாடக நிர்வாக குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.**செல்வராஜ்** |
| துணை தலைவர் | : | திரு.**அந்தோணி ராசையா** |
| செயலர் | : | திரு.**இருதயராஜ்** |
| பொருளர் | : | திரு.**ராஜேந்திரன்** |
| துணை செயலர் | : | திரு.**சூசை செசன்ராஜ்** |
| ஒருங்கிணைப்பாளர் | : | திரு.**சூசை குருநாதன்** |

## வாகனம் ஒழுங்குபடுத்துதல் குழு

1.திரு.**பெலிக்ஸ் அந்தோணி** (தலைவர்)
2.திரு.**அமல்ராஜ்** 3.திரு.**ஜாண்**
மற்றும் திருக்கல்யாணமாதா நற்பணி மன்றம்

## வழிபாட்டுக்குழு

அருட்சகோதரிகள் தலைமையில் நடைபெறும் மற்றும்
**ஜெயராஜ்,பிரான்சிஸ் தேவராஜ்,** திருக்குடும்ப சபை மற்றும் மாதா சபை
இணைந்து செயல்பட வேண்டும்

## பங்கு அலுவலகப் பணிகள் மற்றும் முதலுதவி

1.திரு.**ஜெயசீலன்** ஆசிரியர் (தலைவர்)
2.திரு.**ததேயுஸ்** ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள்
மாணவிகள் இணைந்து செயல்பட வேண்டும்

## கடைகள் குழு

| | |
|---|---|
| 1.திரு.**சூசை செசன்ராஜ்** (தலைவர்) | 5.திரு.**அருள்** |
| 2.திரு.**டோமினிக் ராஜன்** | 6.திரு.**பிரானிசிஸ் தேவராஜ்** |
| 3.திரு.**இருதயராஜ்** | 7.திரு.**அமல்ராஜ்** |
| 4.திரு.**ராஜேந்திரன்** | |

**குறிப்பு:–**

முதல் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பங்குத்தந்தை அடக்கத் திருப்பலி நிறைவேற்ற மாட்டார். அந்தந்த வீட்டாரே குருக்களை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

**– பங்குதந்தை & பங்குமக்கள்**

திருக்கல்யாண அன்னை துணை

# இன்றைய சேமிப்பே, நாளைய வருமானம்

# சிந்திப்போ!

1. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பயன்தரக்கூடிய அனைத்து வகையான LIC பாலிசிகளும் சிறந்த முறையில் எடுத்துத் தரப்படும்.

2. அனைத்து வகையான இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் அனைத்திற்கும் வாகன இன்சூரன்ஸ் சிறந்த முறையில் எடுத்துத் தரப்படும்.

3. 5½ வருடம் செலுத்தக்கூடிய மாதாந்திர R.D. சிறந்த முறையில் எடுத்துத் தரப்படும்.

4. 6 வருடத்தில்இரட்டிப்பாக்ககூடிய டெப்பாசிட் சிறந்த முறையில் எடுத்துத் தரப்படும்.

**உங்களுடைய பணத்தினை லாபம் தரக்கூடிய வகையிலும் பாதுகாப்பான முறையிலும் முதலீடு செய்ய இன்றே அணுகவும்.**

*உங்கள் நண்பன்*



**S.அருண் வினோத்** (ஊராட்சி செயலர்)
S/o.A.சிலுவைத்தங்கம்
புனித அந்தோணியார் கோயில் தெரு
பொத்தகாலன்விளை
அலைபேசி எண்:9942698939

# வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

இம்மாதம் 11,12-12-12 அன்று தூய மிகாவேல் மேல்நிலைப்பள்ளி முதலூரில் வைத்து தமிழ்நாடு விளையாட்டுத்துறையினரால் பஞ்சாயத்து அளவிலான தடகளப்போட்டிகளும் கைப்பந்து போட்டியும் நடைபெற்றது இப்போட்டியில் எம் பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டு அனேக பரிசுகளைப் பெற்று எமது பள்ளிக்கும் எமது ஊருக்கும் பெருமையை நாட்டினர் மாணவியரின் 100 மீட்டர் ஓட்டம் சிவரஞ்சனி முதல்பரிசு, செல்வா இரண்டாம் பரிசு, 400மீட்டர் ஓட்டம் மோகன அம்பிகை முதல்பரிசு லிடியாபபிக் இரண்டாம் பரிசு, மெனுசுயா மூன்றாம் பரிசு 800மீட்டர் ஓட்டம் மோகன அம்பிகை முதல் பரிசு, லிடியாபபிக் இரண்டாம் பரிசு 1500மீட்டர் ஓட்டம் லிடியா பபிக் முதல் பரிசு மெனுசுயா இரண்டாம் பரிசு, 3000 மீட்டர் ஓட்டம் ஜெய பவித்ரா முதல் பரிசு ஜெனிபர் திவ்யா இரண்டாம் பரிசு, வட்டு எறியும் போட்டி ஜெனிப்பர் திவ்யா முதல் பரிசு,ஜெயபவித்ரா இரண்டாம் பரிசு குழு விளையாட்டுப்போட்டியில் கைப்பந்து ஆட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றனர். மாணவர்களுக்கான தடகளப்போட்டியில் 100 மீட்டர் ஓட்டத்தில் நவீன் ராஜ் மூன்றாம் இடத்தைப் பெற்றனர்.

400 மீட்டர் ஓட்டத்தில் ஜானியூட்ஸ் இரண்டாம் இடத்தையும் சகாய அருண் சஞ்செய் மூன்றாம் இடத்தையும், 800மீட்டர் ஓட்டத்தில் நவீன் ராஜ் முதல் இடத்தையும், நிர்மல் ராஜா இரண்டாம் இடத்தையும் 1500 மீட்டர் ஓட்டத்தில் நித்தியானந் இரண்டாம் இடத்தையும், நீளம் தாண்டுதல் போட்டியில் நவீன் ராஜ் இரண்டாம் இடத்தையும், அருள் விஜெய் மூன்றாம் இடத்தையும் வட்டு எறியும் போட்டியில் மகிழன் முதல் இடத்தையும் அருள் விஜெய் இரண்டாம் இடத்தையும் மாணவர்கள் கைப்பந்து போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றனர்.

12-12-12 அன்று 16வயதுக்கு மேல் அனைவரும் கலந்து கொள்ளும் போட்டியில் எம் பள்ளி மாணவியர்கள் 100 மீட்டர் ஓட்டத்தில் மோகன அம்பிகை முதலிடம், சிவரஞ்சனி இரண்டாம் இடம், மெனுசுயா மூன்றாம் இடத்தையும் பெற்றனர் 400 மீ ஓட்டத்தில் லிடியாபபிக் முதலிடம் ஜெயபவித்ரா இரண்டாம் இடம், சிவரஞ்சனி மூன்றாம் இடத்தைப் பெற்றனர் குண்டு எறியும் போட்டியில் ஜெனிபர் திவ்யா மூன்றாம் இடத்தைப் பெற்றாள். வட்டு எறியும் போட்டியில் ஜெனிபர் திவ்யா மூன்றாம் இடத்தைப் பெற்றாள், நீளம் தாண்டும் போட்டியில் சிவரஞ்சனி முதல்பரிசு, மெனுசுயா இரண்டாம் இடத்தைப் பெற்றாள்,

வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள், பரிசுகளைப் வழங்கினார் முதல் பரிசு ரொக்கப்பணம் ரூ.120 இரண்டாம் பரிசு ரூ80 மூன்றாம் பரிசு ரூ.60, வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளை தாளாளர், அருட்திரு. **பபியான் ஜோசப்,** பள்ளி தலைமை ஆசிரியை மார்க்ரெட், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்

**நெல்சன் சத்தியராஜ்**
உடற்கல்வி ஆசிரியர்
புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளி,

## கொட்டுங்கடி கும்மி கொட்டுங்க...




கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி
திருகல்யாண மாதாவின் தேரின் முன்னே
உலகைக் காக்கும் உன்னத மாதாவே
உற்சாகத்துடன் வேண்டிடுவோம்
அன்பின் வடிவே அருள்நிறை மரியே
அகிலம் போற்ற வாழ்த்திடுவோம்
அற்புதம் நிகழ்த்த மகனை வேண்டும்
அன்னை மரியை போற்றிடுவோம்
சிங்காரத் தேரினில் சிரித்த முகமாய்
சிகரம் போல உயர்ந்தவளே
மங்கையர் நாங்கள் மகிழ்ந்து பாடி
மாட்சிமையோடு வணங்கிடுவோம்
தாய்மரி உன்னை தரணி போற்ற
தந்தனத் தோம் சொல்லி கும்மியடி
பொற்பை நகரின் பெண்கள் யாவரும்
பொற்கரம் தட்டி கும்மியடி

– **சுகிர்தமணி அன்பரசன்** (ஆசிரியர்)
கவரப்பேட்டை

---

## தேடி வரும் தென்றல்....

1.ஆடிவரும் தென்றலான இனிமை கொஞ்ச
அசைந்து வரும் மேகமென குளுமை மிஞ்ச
ஓடிவரும் அருவியென வளமை பொங்க
உதித்து வரும் பரிதியென ஒளி துலங்க
கோடி மலர் சூடிவரும் வசந்தமாக
நாடிவரும் பேருவகை பெருக நம்மைத்
தேடிவரும் திருக்கல்யாண அன்னை-நம்
சிந்தையெல்லாம் அள்ளுகின்ற விந்தை
– என்னே!
2.பகைவரையும் அரவணைக்கும் கருணை
– வெள்ளம்!
பனிமலைப்போல் உருகிவரும் கனிந்த உள்ளம்
முகையவிழும் புன்முறுவல் கவரும்-காந்தம்!
மூர்க்கரையும் வசமாக்கும் எளிமை சாந்தம்
திகைப்பவரை நிலைநிறுத்தும் அஞ்சாநெஞ்சம்!
திண்டாடும் ஏழைகளைத் தேற்றும் மஞ்சம்!
புகையனைய பிணிகள் தீர்க்கும் காற்று!
புதுயுகத்தின் விடிவெள்ளி! அமுத ஊற்று!
பொற்பையின் காவலி கல்யாணத்தாய் மாமரி..

**வினோத்** – பொற்பை



### அருள் நிறைந்தவளே!

அருள் நிறைந்தவளே!
அகிலத்துக்கும் அன்னையே!
தரணியில் குறைகள் தீர்க்கும்
குணவதியே
தாயாக வரம் தரும் தாயே
–என்
திருவசனத்தில் புன்னகை
ஏனோ?
திருமணக் கோலம்
காணச்செய்வதால்தானோ

**ஜோஸ்பின்மேரிதாசன்**
கவரப்பேட்டை

## கொண்டாட்டம் __ சென்னை வாழ் பொற்பை நகர் சங்க ஆண்டு விழா

சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச் சங்க ஆண்டுவிழா, கிறிஸ்துமஸ் விழா மற்றும் புத்தாண்டு விழா 30.12.2012 அன்று காலை 10 மணி அளவில் அருட்தந்தை.டென்சில் ராஜா அடிகளார் தலைமையில் ஆரம்பமானது. அன்று சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் விளையாட்டுப் போட்டிகளும், பாட்டுப்போட்டி, பேச்சுப்போட்டி, கிறிஸ்துமஸ் பரிசளிப்பு, கிறிஸ்துமஸ் இன்னிசை நிகழ்ச்சிகள் மற்றும் விருந்தும் வெகு சிறப்பாக நடைபெற்றது. மக்கள் அனைவரும் கலந்து கொண்டது அனைவர் உள்ளத்திலும் மகிழ்ச்சியைத்தந்தது. இவ்விழா ஒரு குடும்ப விழாவாகவும், குடும்ப பகிர்வின் விழாவாகவும் அமைந்தது. பங்குத்தந்தை தொலைபேசி முலம் மக்களுக்கு வாழ்த்துக்களையும், நல் ஆசீரையும் வழங்கினார். கூட்ட முடிவில் விழாவை ஏற்பாடுகள் செய்த பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

**–சென்னை வாழ் பொற்பை மக்கள்**
**நிர்வாகிகள் மற்றும் விழாக்கமிட்டியார்கள்**

---

## பொங்கல் திருநாள்

தமிழர், தம் வாழ்நாளில் எத்தனையோ விழாக்களைக் கொண்டாடுகின்றனர். அவற்றுள் பொங்கல் திருநாள் தான் தலைமையானதாகும்.

தை முதல் நாளன்று பெரும் பொங்கல் கொண்டாடப்படும். பொங்கலன்று புதுப்பானைக்குப் பொட்டிட்டு, இஞ்சி,மஞ்சள் ஆகிய கொத்துக்களைக் கட்டிப் புதிய அடுப்பில் ஏற்றி, அதில் பால் ஊற்றித் தீ மூட்டுவர்.

பால் பொங்கி வரும்போது பொங்கலோ பொங்கல் எனக் குரல் எழுப்பி மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர். பின் அப்பாலோடு புத்தரிசி, வெல்லம் முதலியன இட்டுப் பொங்கல் தயாரிப்பார். அடுத்து அப்பொங்கலை இலையில் இட்டு, அதனுடன் இஞ்சிக் கொத்து, மஞ்சள் கொத்து, கரும்பு, கிழங்கு வகைகள் முதலிய அனைத்தையும் வைத்துப் படைத்துக் கதிரவனை வழிபடுவர். தமிழர்கள், ஞாயிற்றிற்கு நன்றி தெரிவிக்கும் நாளே பெரும் பொங்கல் நாளாகும்.

T.**ஜெபசீலி,** X.**பவித்ரா – பொற்பை**

---

## இந்தியா – குடியரசு

1946 ஆம் ஆண்டு இந்திய அரசியல் அமைப்பு தனது பணியினைத் தொடங்கியது. அரசியல் அமைப்பு குழுவின் தலைவராக டாக்டர்.இராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டாக்டர்.அம்பேத்கார் அரசியல் அமைப்பு வரைவுக்குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கபட்டார் நீண்ட விளக்கமான விவாதங்களுக்குப் பின் 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26ம் நாள் இந்திய அரசியலமைப்பை இக்குழு ஏற்றது. 1950-ம் ஆண்டு நவம்பர் 26ம் நாள் இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. அது முதல் இந்த தினம் குடியரசு தினமாக கொண்டாடப்படுகிறது. ஜனாதிபதி நாட்டின் அரசியல் தலைவராகவும், பிரதம அமைச்சர் நிர்வாகத் தலைவராகவும் அரசியலமைப்பின் பாதுகாவலராக நீதித்துறையும் விளங்குகிறது. இந்தியாவின் முதல் குடியரசு தலைவர் டாக்டர். இராஜேந்திரபிரசாத். தற்போதைய குடியரசு தலைவராக திரு.பிரணாப் முகர்ஜி பணியாற்றி வருகிறார்.

**– அஜெய் இனிகோ, பொற்பை**

# நவம்பர் 2012– வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| **நிரந்தரவைப்பு நிதியில் ரூ. 3,00,000** | **3,85,413.00** | |
| **வங்கியில் ரூ. 81,703** | | |
| **கையில் ரூ. 3,710** | | |
| திருப்பலி வரவுகள் | | |
| முதல் சனி 449 X 70 = 31,430 | 36,470.00 | |
| பங்கு இல்லம் 72 X 70 = 5,040 | | |
| ஞாயிறு காணிக்கை | | |
| பொற்பை -11210 | | |
| கிளைப்பங்குகள் - 1220 | 12,430.00 | |
| திருமணம் | 450.00 | |
| அடக்கம் | 1250..00 | |
| ஞானஸ்நானம் | 100.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 1,49,190,00 | |
| பள்ளி மூலம் வரவு | 8,135.00 | |
| பயணிகள் தங்கும் அறை | 500.00 | |
| ஆலய வீடு வாடகை – 2 மாதம் | 2000.00 | |
| அசன மண்டப வாடகை | 4000.00 | |
| பைன் மூலம் வரவு | 30,000.00 | |
| முதல்சனி கடைகள் | 2,895.00 | |
| உபதேசியார் மூலம் ஏல வரவு | 9,765.00 | |
| வங்கி வட்டி வரவு | 2,995.00 | |
| மொத்தம் | 6,45,593.00 | |

## செலவுகள்

| | | |
|---|---|---|
| கோயில் இன்வெர்ட்டர் சர்வீஸ் | | 320.00 |
| அலுமினிய நெற்று அடிக்க | | 2470.00 |
| நியூஸ் பேப்பர் செப்,அக்,நவம்பர் 2012 | | 333.00 |
| முதல் சனி அருட்தந்தையர்கள் படி | | 8350.00 |
| தேர் ஜோடனை முன்பணம் | | 40000.00 |
| அருட்பணியாளர்கள் உடுப்பு வகையில் | | 4,250.00 |
| தேர்பறை கொத்தனார் கூலி | | 400.00 |
| இருசக்கர வாகனம் சரிசெய்ய | | 1,360.00 |
| ஓஸ்தி,மெழுகுவர்த்தி | | 1,258.00 |
| மேக் டிவி விளம்பரம் (முதல் சனி) | | 4000.00 |
| திருவிழா மேளம் முன்பணம் | | 5000.00 |
| கல்லறை திருவிழா ஒலி,ஒளி அமைக்க | | 4000.00 |
| பிரதர் தியானம் பண்ண படி | | 1000.00 |
| மின்விசிறி வாங்கியது 2 | | 3220.00 |
| ரெகுலேட்டர் | | 160.00 |
| திருவிழா வாணம் முன்பணம் | | 5000.00 |
| உண்டியல்களில் ஸ்டிக்கர் ஒட்ட | | 520.00 |
| லைன்மேன் | | 100.00 |
| எரிவாயு | | 440.00 |
| டோபி | | 270.00 |
| ஆலயத்திற்கு பூட்டு வாங்கியது | | 675.00 |
| ஆடிட்டர் கட்டணம் | | 1500.00 |
| திருக்கல்யாணத்தாய் புக் அச்சடிக்க (நவ,டிசம்பர் 2012) | | 7000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| டிஜிட்டல் போர்டு 4 மற்றும் ஒட்டு கூலி | | | | 5450.00 |
| திருவிழா பூ முன் பணம் | | | | 1000.00 |
| பினாயில் ஜெராக்ஸ், வாளிகள் & மக்குகள் | | | | 1410.00 |
| பரிசுப்பொருட்கள் | | | | 430.00 |
| டீசல், வாகனம் ஜெனரேட்டர் | | | | 8539.00 |
| பங்கு இல்ல பராமரிப்பு | | | | 1476.00 |
| பயணப்படி | | | | 730.00 |
| பழங்கள் | | | | 860.00 |
| செக்போஸ்ட் | | | | 140.00 |
| வாகனம் சரிசெய்ய | | | | 10738.00 |
| வண்டி வாடகை | | | | 3220.00 |
| கேரளா போக்குவரத்து | | | | 2500.00 |
| உதவி தொகைகள் | | | | 3621.00 |
| தொலைபேசி & செல்போன் கட்டணம் | | | | 1100.00 |
| காம்பவுண்ட் சுவர் சரி செய்ய | | | | 2,28,656.00 |
| மருந்துகள் | | | | 704.00 |
| மளிகைபொருட்கள் | | | | 2,591.00 |
| ரேசன் பொருட்கள் | | | | 365.00 |
| சிக்கன் (முதல் சனி) | | | | 280.00 |
| தண்ணீர் & பால் | | | | 1700.00 |
| இடிதாங்கி,கெபி, பல்புகள் சரிசெய்ய | | | | 2745.00 |
| உபதேசியார் ஊதியம் | | | | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | | | | 3000.00 |
| இரவுப் பணியாளர் ஊதியம் | | | | 2000.00 |
| தொடக்கப் பள்ளி ஆசிரியை ஊதியம் | | | | 2000.00 |
| துப்பரவு பணியாளர்கள் ஊதியம் | | | | 6000.00 |
| அருட்சகோதரர் படி | | | | 1,000.00 |
| பங்குத் தந்தை படி | | | | 6,000.00 |
| பங்குத் தந்தை திருப்பலி | | | | 1,500,00 |
| திருவிழா ஒலி,ஒளி அமைப்பு முன்பணம் | | | | 20,000.00 |
| புனித வரி | | | | |
| திருப்பலி | 521 × 5 | = | 2605 | |
| திருப்பலி | 491 × 50 | = | 24550 | |
| திருமணம் | 1 × 8 | = | 8 | |
| அடக்கம் | 2× 7 | = | 14 | 27,182.00 |
| ஞானஸ்நானம் | 1 × 5 | = | 5 | |
| மொத்த செலவு | | | | 4,42,563.00 |

இறுதி இருப்பு விவரம்

| | |
|---|---|
| நிரந்தர வைப்பு நிதியில் | ரூ 200000.00 |
| வங்கியில் | ரூ. 782.00 |
| கையில் | ரூ 2248.00 |
| மொத்தம் | ரூ 2,03,030.00 |

| | | |
|---|---|---|
| மொத்த வரவு | ரூ. | 6,45,593.00 |
| மொத்த செலவு | ரூ. | 4,42,563.00 |
| இறுதி இருப்பு | ரூ. | 2,03,030.00 |

அருள் தரும் இமயம் திருக்கல்யாண
தாயின் திருத்தல திருவிழா மற்றும்
அன்னையின் அதிசய நூறாவது தேர்பவனி
காணவரும் பக்தர்கள் அனைவரையும்
வருக! வருக! என அன்புடன் வரவேற்கிறோம்!





அன்புடன் S.A.**ரவீஸ்டர்** மற்றும்
குடும்பத்தார்

பொத்தகாலன்விளை

## சிங்காரத் தேரிலே உலாவரும் திருக்கல்யாணத்தாய்

பொற்பை நந்தவனத்தில் சிங்காரத் தேரிலே
உலா வரும் கல்யாண மரியைக் கண்டேன்!
வீசும் தென்றலிலும், நிலவின் குளிர்ச்சியிலும்
அன்னையின் நேசம் மணக்க கண்டேன்!
நீ வாழ்க! நிதம் வாழ்க!கல்யாணத்தாயே!
எந்நாளும் நீ வாழ்க! உன் திருப்பெயர் வாழ்க!
நீ சிங்காரத் தேரில் உலா வரும் போதினிலே
மக்கள் மனமும் தான் நிறையுதம்மா
நீ அருள்மழை பொழியும் போதினிலே
எங்கள் குலமும் வளமும் செழிக்குதம்மா
உந்தன் திருமண விருந்தினிலே
மாந்தரில் உயர்வும் தாழ்வும் மறையுதம்மா

– M.மிக்கேல் உஷா, பொற்பை

## பொன் மொழிகள்

தியாகம் செய்வதற்கான துணிச்சல், ஆண்களைவிட பெண்களிடம் தான் அதிகம் உள்ளது. – காந்திஜி

2.படித்தவனால் தன் தலையெழுத்தைப் படித்து அறியமுடியும். எழுதத் தெரிந்தவனால் அதை மாற்றி எழுத முடியும். – தாமஸ் சார்லஸ்

3.தோல்வியை வெறுப்பதைவிட, அதை வெற்றியாக மாற்றிக் காட்டுவதுதான் லட்சியவாதிக்கு அழகு – ஹாஸ்லிட்

4.தவறிவிழுந்த விதையும் முளைக்கும். அதுபோல தவறியவனும் முன்னேறலாம், தன்னம்பிக்கை என்னும் உயிர் இருந்தால். – காலின்ஸ்

5.கால்போன போக்கில் போனாலும், மனம் போனபோக்கில் போனாலும் தவறான இடத்தைப் அடைய நேரிடும். – எம்மன்ஸ்

தொகுப்பு : மேரி லீலா – பொற்பை

## *திருக்கல்யாண அன்னையின் அதிசய 100–வது தேர்ப்பவனி*

பொத்தகாலன்விளை திருக்கல்யாணமாதா திருவிழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்காக 1914–ம் ஆண்டு சுமார் 50 அடி உயரம் உள்ள தேரில் திருக்கல்யாண அன்னையின் சுருபத்தை வைத்து முதல் தேரோட்டம் நடைபெற்றது. 70 ஆண்டுகள் கழித்து முதலில் உளள தேர் பழுது அடைந்ததால் அருள்திரு.M.லூர்து மணி அடிகளார் அவர்கள் 2–வது முறையாக பங்குத்தந்தையாக பொறுப்பேற்றக் காலத்தில் அன்னைக்கு புதிய தேர் செய்யப்பட்டது. 1984–ம் ஆண்டு முதல் புதிய தேரில் அன்னை பவனியாக வந்து தம் மக்களை ஆசீர்வதித்து வருகிறாள். இந்த ஆண்டு 2013–ல் நடைபெறுகின்ற அன்னையின் அதிசய தேர்ப்பவனி 100–வது தேர்ப்பவனி ஆகும்.

– ஆசரியர் குழு

# திருக்கல்யாண மாதா
# திருவிழா நல்வாழ்த்துக்கள்!



# RAJ CONSTRUCTION & MOVERS

*(Specialist in all kinds of Civil Engineering & Mechanical Earth Works)*

**OFFICE :**
17, NEHRU NAGAR
ARUMBAKKAM,
CHENNAI - 600 106
Ph : 23635688, Cell : 94441 51369, 98840 48877
Email : humjose@gmail.com

PROPRIETOR :-
**V.R.A.JAYARAJ**
**R.JOSE**
(P.W.D. Contractors)


## திருக்கல்யாண மாதா
## திருவிழா நல்வாழ்த்துக்கள்!

# MERLYN HYDROCARBONS PVT LTD.

**V.E. KAMARAJ**
Managing Director
Cell : 094440 59848







**Works :**
Plot No. 366, KIADB
Industrial Growth Centre
Holenalasupura Road
Hassan - 573201
Karnataka

**Office :**
Behind Minnie Motors
2nd Floor, Ashoka Nagar,
Tumkur - 572 101
Ph : 0816 - 2251699
0816 - 2251599

**Email :**
merlynhcpl@yahoo.com

## ஹெல்த் கார்னர்



# ஆவாரம் பூ

ஆவாரை பூத்திருக்க சாவாரை கண்டதுண்டா? என்பது சித்தர் பாடல். ஆவாரையை காயகல்ப மூலிகை என சித்தர்கள் குறிப்பிடுகின்றனர். உடலில் இருக்கும் பல மில்லியன் செல்களிலும் சேரும் கழிவுகளை நீக்க முடியாமல் போகும் போது வியாதிகள் வருகின்றன என்பது நமது நாட்டு வைத்திய தத்துவம். அந்த செல்களின் கழிவை மூலிகைகள் சில நீக்குகினறன. இதனால் என்றும் இளமை வாய்க்கிறது. இத்தகைய மூலிகைகளையே காயகல்ப மூலிகைகள் என சித்தர்கள் கூறுகின்றனர்.

மதிப்பு தெரியாமல் காடெல்லாம் பூத்துக்கிடக்கிறது. ஆவரை, இதன் வேர், இலை,பூ, கிளை, காய் என அனைத்தும் மருத்துவ குணம் வாய்ந்தவை.

ஆவாரம்பூ நீரிழிவு, வறட்சி, கற்றாழை நாற்றம் ஆகியவற்றைப் போக்கும், இலை, பூ, காய், பட்டை, வேர், ஆகியவை நீரிழிவு, வெள்ளைப்படுதல், உட்கரு நோய், புண், எலும்பைப் பற்றிய சுரம், நீர் வேட்கை போன்றவற்றை நீக்கும். பூவை வதக்கி கண் நோய்க்கு ஓத்தடம் இடலாம். இதன் பூவை இனிப்புடன் கிளறி அல்வா செய்து சாப்பிட வெள்ளைப்படுத்ல், மூத்திர ரோகம், ஆண்குறி, எரிச்சல் நீங்கும். சொப்பன ஸ்கலிதம் நிற்கும். பெரும்பாடு என்னும் கொடிய நோய் போகும், நீரில் சர்க்கரை குறையும். இதன் பூக்களை நிழலில் காயவைத்து காலையில் ஆவரம் டீ தயாரித்து அருந்தலாம். இது சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும். இதனுடன் நாகப்பழத்தின் கொட்டையும் சேர்த்து பயன்படுத்தலாம்.

சிறந்த கோடை காப்பான் என்று வர்ணிக்கப்படும் ஆவாரையை தொடர்ந்து பூசி குளித்து வர உடல் தங்கம் போல் ஆகும். இது உரு மொத்த மருத்துவ மூலிகைப் பயன்பாடுடைய ஒரு தாவரமாகும். இதை ஒரு வணிக பயிராகவே வளர்த்து சாறு பிழிந்தெடுத்து எரிபொருளாக விற்றால் வாங்குவதற்கு வையகமே காத்திருக்கிறது.

– நன்றி தினத்தந்தி

## ஒருவரி உண்மைகள்

- சென்னை மியூஸியம் 1851-ல் தொடங்கப்பட்டது.
- வெப்பத்தைக் ஈர்க்கும் ஆற்றல் இரும்புக்கு அதிகம்.
- சண்டிகாரை வடிவமைத்தவர் லா கார்பூசிளர்.
- ஜனவரி ஆண்டின் தொடக்கமானது 1752-ல் தான்.
- கண்ணாடி திடப் பொருளல்ல. விறைத்த திரவம்.
- முதல் மின்சார விளக்கு எரிந்தது 1879-ல் தான்.
- கற்கோயிலை முதலில் கட்டியவர்கள் பல்லவர்கள்.
- இந்தியாவில் முதல் ரயில் 1858ல் ஓடியது.
- அம்மைக் குத்தும் முறையைக் கண்டவர் எட்வர்ட் ஜென்னர்.
- உலகின் பெரிய எரிமலை கொடபாக்கி.

தொகுப்பு : **A. மனோ ராயன்**– பட்டணம்

# வாசகர் உள்ளம்......



✱ உலக திருச்சபை செய்திகள் வாயிலாக திருத்தந்தையின் அறிவிப்புகள் மற்றும் உலக அளவில் திருச்சபையின் செயல்பாடுகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

**சேவியர்** - காவை

✱ மறைமாவட் செய்திகள் வாயிலாக மேதகு ஆயர் அவர்களின் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ள முடிகிறது.

**சிறுமலர்** -சென்னை

✱ பங்கு செய்திகள் நமது பங்கின் நிகழ்வுகள் மேலும் நமது பங்கின் இந்த நம்பிக்கை ஆண்டில் செயல்படுத்த இருக்கும் 10 அம்ச திட்டங்கள் மற்றும் வின்சென் தே பால் சபையின் செயல்பாடுகளைப் பற்றி அறிந்து கொள்ள ஏதுவாக உள்ளது. **தேவி** - கோவை

✱ அறிவோம் அன்னையை பகுதி அன்னையைப் பற்றிய பல தகவல்களை அள்ளித் தருகின்றது. **சேகர்** -மதுரை

✱ ஓரே நாளில் நமது உடலில் நிகழும் அதிசயங்கள் ஆச்சரியமூட்டும் தகவல்கள். ஆரோ அல்ஃபினா -மீரான்குளம்

✱ கவிதைச் சோலை மிகவும் அருமை **லிவியா**-காரைக்குடி

✱ முதல் சனி வரவு,செலவு மற்றும் பங்கின் வரவு செலவுகள் பங்குத்தந்தையின் வெளிப்படையான தூய்மையான நிர்வாகத்திற்கு ஓர் சாட்சி. - **ரவி**-மயிலாடுதறை

✱ முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் எம்மைப் போன்ற வெளியூரில் வசிக்கும் பொற்பை மக்களுக்கு ஆனந்தத்தை அள்ளித் தருகிறது.

**செல்வக்குமார்** - திருச்சி

✱ கிறிஸ்மஸ் குடில், கிறிஸ்மஸ் தாத்தா, கிறிஸ்மஸ் கேரல்ஸ், கிறிஸ்மஸ் மரம் போன்ற தகவல்கள் மிகவும் பயனுள்ளதாகவும், பிறருக்கு இதைப் பற்றி எடுத்துச்சொல்ல உதவியாக இருந்தன. **ஆரோக்கிய ராஜ்** - திண்டுக்கல்

✱ ஹெல்த் கார்னர் பயனுள்ள தகவல்கள்

- **கஸ்லன் அருள் ஜோசப்** - நாகை

✱ திருக்குடும்பம் கட்டுரை குடும்பங்களுக்கு மிகச் சிறந்த எடுத்துகாட்டு

**பங்கராஸ்**-தைலாபுரம்

✱ வாழ்க்கை என்பது மிக அருமையான தத்துவங்களை வாழ்க்கைக்கு தந்தது. **சிபிசன்** - சிதம்பராபுரம்.

# வரவேற்கிறோம்

**இறை ஆசீராய் எம் இல்லங்களில் பிறந்து பொற்பை திருச்சபையை அலங்கரிக்கும் அன்பு மலர்களே உங்களை பாசமுத்தத்துடன் வரவேற்கிறோம்.**

| | | | |
|---|---|---|---|
| 1. சகாய ஆகாஷ் சுதர்சன் | 23.04.12 | ஜஸ்டின் மரியசெல்வம் | கொழுந்தட்டு |
| 2.பிரான்சிஸ் ரோகன் | 11.07.12 | சர்லின், ஜெயகுமார் வர்கிஸ்,பிரமிளா | கொழுந்தட்டு |
| 3.அமல டோமினிகா | 07.04.12 | கிறிஸ்டோபர் சகாய வளர்மதி | கொழுந்தட்டு |
| 4.இருதய கென்சித் | 25.05.12 | தருமராஜ் இருதயராதா | கொழுந்தட்டு |
| 5.அன்றோ ராபிக்சன் | 24.03.12 | ஆரோக்கிய செல்வன் அருள் கீதா | கொழுந்தட்டு |
| 6.ஸ்பான்தானா குயின்ஷா | 25.01.12 | தனசீலன் மரிய ஜோபியா | கொழுந்தட்டு |
| 7.அந்தோணி பிரான்சிஸ் இனிகோ | 28.12.11 | சேவியர் பதுவை ரமேஷ் அந்தோணி எபனேசர் பாத்திமா | கொழுந்தட்டு |
| 8.ரொகாபாத் நிஷ்கி | 05.08.11 | விஜயகுமார் வெர்ஜின் மேரி | கொழுந்தட்டு |
| 9.அந்தோணி ஆரோக்கிய சலோமியா | 25.05.12 | பிரான்சிஸ் சேசு ராஜா அந்தோணி ஜெயசித்ரா | கொழுந்தட்டு |
| 10.தேவ பிரான்சிஸ் ரிதீஸ் | 23.06.10 | சுபாஷ் சந்திர போஸ் ஆரோக்கிய அமுதா | கொழுந்தட்டு |
| 11.பிரான்சிஸ ரினோபியா | 04.03.12 | மரிய பீட்டர் ராஜா வளர்மதி | கொழுந்தட்டு |
| 12.அற்புத டயரோமா பிரின்சஸ் | 04.05.11 | வெலிங்டன் ஜோபா | கொழுந்தட்டு |
| 13.சேவியர் பிரின்ஸ் | 23.03.11 | அந்தோணி வினிஷ் பெனிஷ்டா தேவி | கொழுந்தட்டு |
| 14.தேவ சகாயம் | 14.09.12 | வருவேல் துரை மரியாள் | கொழுந்தட்டு |
| 15. ஜெர்லின் மடோனா | 29.05.12 | ஜோசப் ததேயுஸ் ராஜா மெர்சி ஜீசஸ் மேரி | பொற்பை |

# வாழ்த்துகிறோம்

| எண் | மண நாள் | மணமக்கள் | ஊர் |
|---|---|---|---|
| 1. | 30.11.12 | யோகான் புஷ்ப அந்தோணி சர்மிளா | பொற்பை |

# இதய அஞ்சலி

| | | |
|---|---|---|
| 1.ஜான்பிரிட்டோ | கொழுந்தட்டு | 21.11.12 |
| 2.தொம்மை | கொழுந்தட்டு | 27.11.12 |
| 3.அமல புஷ்பம் | பொற்பை | 02.12.12 |
| 4. சேசம்மாள் | பொற்பை | 13.12.12 |

கோடி குட்பெரல

# அகத்தியர் முனி குழந்தைகள் நல மையம்

**குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவமனை**

வெள்ளமடம் - 629 305, கன்னியாகுமரி மாவட்டம்,

தொலை பேசி: 04652 – 285708 / 285787 மின்னஞ்சல் : ggamccc@rediffmail.com, web site: www.ggamccc.org

**எங்கள் குழந்தைகள் நல மையத்தில் ......**

- 24 மணி நேர அவசர சிகிட்சை வசதி / குழந்தைகள் நல மருத்துவரை பார்க்கும் வசதி
- எல்லா நாட்களிலும் காலை 9 மணி முதல் 6 மணி வரையிலும் வெளிநோயாளிகள் சிகிட்சை வசதி
- பச்சிளம் குழந்தைகளுக்கான (Neonates) சிகிட்சை வசதி,
- அனைத்து விதமான பல் மருத்துவம், OPG, RVG, X-ray) வசதி
- எலும்பு சிகிட்சை ➤ காது, மூக்கு, தொண்டை சிகிட்சை
- அறுவை சிகிட்சை வசதி ➤ X-ray, மருந்தகம், ஆய்வு கூட வசதி
- ஹோமியோபதி மருத்துவம் ➤ சித்த மருத்துவம் ➤ தோல் மருத்துவம்
- உடல், மனம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான மறுவாழ்வு மையம் (Physiotherapy, Myoreflex therapy, Occupational therapy, Speech Therapy, Special Education)
- நோயாளிகளை பராமரிப்பவர்கள் தங்கி ஓய்வெடுக்க தனி இட வசதி ➤ உணவு வசதி
- வெள்ளமடம் சந்திப்பிலிருந்து மருத்துவமனைக்கு வந்துச் செல்ல இலவச வாகன வசதி.

ஆகிய அனைத்து வசதிகளும் உள்ளன.

குறை மற்றும் நிறைமாதத்தில் பிரசவித்த குழந்தைகளுக்கான தீவிரச் சிகிச்சைப்பிரிவு (NICU & PICU) வென்டிலேட்டர், வார்மர், போட்டோதெரபி வசதியுடன் 24 மணி நேரமும் செயல்படுகிறது.
Intensive care for preterm & full term neonates & children, with ventilators, warmers, phototherapy units & monitors available.

| பிற சிறப்பு மருத்துவர்கள் ஆலோசனை மற்றும் பார்வை நேரம் | | |
|---|---|---|
| சிறப்புத் துறை | நாள் | நேரம் |
| குழந்தைகள் அறுவை சிகிட்சை மற்றும் தீக்காயப் பிரிவு | திங்கள் முதல் சனி வரை | காலை 10.00 முதல் 1.00 வரை |
| எலும்பு மற்றும் முடநீக்கியல் | திங்கள், வெள்ளி | பிற்பகல் 2.30 முதல் 4.30 வரை |
| காது, மூக்கு, தொண்டை | திங்கள், வெள்ளி | பிற்பகல் 3.00 முதல் 6.00 வரை |
| பல் மற்றும் முகச் சீரமைப்பு பிரிவு | திங்கள் முதல் சனி வரை | காலை 9.30 முதல் 12.30 வரை |
| ஹோமியோபதி மருத்துவம் | திங்கள் முதல் வியாழன் மற்றும் சனிக்கிழமை வெள்ளிக்கிழமை | காலை 10.00 முதல் 12.30 வரை<br>மாலை 03.00 முதல் 5.30 வரை |
| சித்த மருத்துவம் | திங்கள், புதன் மற்றும் சனிக்கிழமை வெள்ளிக்கிழமை | காலை 10.00 முதல் 12.30 வரை<br>மாலை 03.00 முதல் 5.30 வரை |
| மூளை நரம்பியல் மற்றும் வலிப்பு நோய் மருத்துவம் | வெள்ளி | பிற்பகல் 2.00 முதல் 4.00 வரை |
| தோல் மருத்துவம் | வெள்ளி | பிற்பகல் 4.30 முதல் 6.30 வரை |
| நோய் தடுப்பு மருத்துவம் (தடுப்பூசி) | தினமும் | காலை 9.00 முதல் மதியம் 1.00 வரை |



பெரு மருத்துவமனை ,

- முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு திட்டம் (CMCHISTN)
- அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (TNNHIS)
- தொழிலாளர் மாநில மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (ESI)
- ஸ்டார் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (Star Health Insurance)



**With Best Compliments from I. Ignaci Antony Durai for GGAMCCC Hospital**

ஏழை சிறார்களுக்கு கட்டண சலுகையும் மிக்க ஏழைகளுக்கு முற்றிலும் இலவசமாகவும் சிகிட்சை கொடுக்கப்படுகிறது

# இறைவனுடைய மாதாவே




கடவுளை 'அப்பா' என்றும் 'அம்மா' என்றும் அழைக்க கடவுள் நமக்கு உரிமை கொடுத்திருக்கிறார். ஆனால் கடவுளை மகன் என்றும் மனிதன் என்றும் எவராலும் அழைக்க முடியுமா? முடியும். அதுவும் மரியாவால் மட்டுமே முடியும். அதுவும் இதோ என் உடல் இதோ என் இரத்தம் என்று குருக்கள் திருப்பலியில் கூறுகின்ற வசீகர வார்த்தையை முழு உரிமையோடு கூற அன்னை மரியாள் ஒருவருக்கே உரிமையுண்டு ஏனெனில் மரியாள், தன் இரத்தத்தலிருந்தும் உடலிலிருந்தும், தூய ஆவியின் துணையோடு இறைமகனைப் பெற்றெடுத்த தாய் என்பதால் தான் என்று புனித அகஸ்டின் கூறுகிறார்.

மரியாள் இறைவனின் தாய் என்று கருத்தியல் எகிப்திய மக்களின் சமயப் பற்றிலிருந்து உருவாக்கம் பெறுகிறது. எகிப்தியர்களின் மரபுப்படி இசுஸ், சூரியக் கடவுளின் தாயாகும். எகிப்தியர்களும் தங்களின் தேவைகளை இந்தப் பெண் தெய்வத்திடம் முறையிட்டுப் பெற்றுக் கொண்டனர். ஏனெனில் இந்தப் பெண் கடவுள் ஒரு தாய் போன்று கருணை மற்றும் கனிந்த உள்ளம் கொண்டவள் என்று அவர்கள் கருதினார்கள். அந்தக் கருத்தியல் கிறிஸ்தவர்களிடையே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அதாவது எகிப்து நாட்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கி.பி. 3-ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே, மரியாள் இறைவனின் தாயென ஏற்று வாழ்ந்து வந்தனர். திருச்சபைத் தந்தையர்களில் ஒருவரான ஆரிஜென் தான் முதன் முதலில் இந்தச் சொற்கோவையை மரியாளுக்குச் சூட்டினார். கிறிஸ்தவம் தோன்றியது முதல் கி.பி.313-ஆம் ஆண்டு வரை பல எதிர்ப்புகளையும் வேத கலாபனைகளையும் அது சந்தித்து வந்தது. பேரரசர் கான்ஸ்டன்டைன் கி.பி.313 ஆம் ஆண்டு மிலான் உடன்படிக்கை மூலம் கிறிஸ்துவ மக்களின் சுதந்திரத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்தார். தன்னையும் ஒரு கிறிஸ்தவர் என்று அழைத்துக் கொண்டார்,

விவிலியமும் இதைப் பற்றித் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இயேசுவின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளில் மரியாள் இறைவனின் தாய் என்றே குறிப்பிடப்படுகிறார். அவர் ஆண்டவரின் தாய் என்னிடம்வர நான் யார் (லூக் 1:43) ஆண்டவர் என்ற வார்த்தையானது கிரேக்கர் யூதர்கள் மத்தியில் கடவுள் என்றே அர்த்தம் பெற்றுள்ளது. அவ்வாறே யோவானும் இயேசுவின் தாய் என்றே குறிப்பிடுகிறார். என்பதை விவிலியம் நன்கு உரைக்கின்றது. தூய ஆவி உம்மீது வருவார். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும் (லூக் 1:35) மரியாள் இறைவனைச் சுமந்து பெற்றதால் இறைவனின் தாய் என்று அழைப்பது மிகவும் பொருத்தமாகும்.

நன்றி : - **தாயே எங்கள் தஞ்சமே.**



# ஜகதீஷ் சந்திர போஸ்

டாக்கா மாவட்ட கிராமம் ஒன்றில் 1858-ல் பிறந்த இவர் சிறுவயதிலிருந்தே தாவரங்கள், விலங்குகளைப் பற்றி அறிவதில் ஆர்வம் கொண்டு வந்தார். மருத்துவப் படிப்புக்காக விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றுத் தாய்நாடு திரும்பினார். கல்கத்தா கல்லூரியில் பௌதிகப் பேராசிரியராகச் சேர்ந்தார். மின்சாரக் கதிர்ப்பு பற்றிய இவரது ஆராய்ச்சி பல விஞ்ஞானிகளாலும் பாராட்டப்பட்டது. கல்லூரியில் ஆராய்ச்சிக்கூடம் அமைக்க ஏற்பாடு செய்து, அங்குப் பல உண்மைகளைக் கண்டறிந்து வெளியிட்டார். தாவரங்களுக்கும் உணர்வும் உயிரும் உண்டு என்பதை நிரூபித்துக்காட்டியது இவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும். புகழும், பட்டங்களும் அவரை நாடி வந்தன.

## செப்டம்பர் மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்துவலம் :** 1.மேகங்கள் 5.கொடியோர் 9.மண்ணுலகு 13. வலிமை 17.காசா 21.மரம் 25.சீயோனை

**வலமிருந்து இடம்** : 2.பாறைகள் 6. கல்தேயர் 10.கதிரவன் 14.பேரொலி 18.தீர்ப்பு 22.யோசுவா 26.அத்திமரம்

**மேலிருந்து கீழ்** : 3.தீப்பொறி 7.குதிரைகள் 11.கொள்ளைநோய் 15.நேர்மை 19.காணிக்கை 23.செக்கரியா 27.ஏழு

**கீழிலிருந்து மேல்** : 4.நினிவே 8.காட்சி 12.கூசா 16.மனத்தாழ்மை 20.செருபாபேல் 24.திரும்பி

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்று பாராட்டுப்பெறுபவர்கள்

1.D.**ஜோஸ்பின் மேரிதாசன்** கவரப்பேட்டை
2. J.**ஏசுமதி** – கவரப்பேட்டை
3.**அந்தோணி சேவியர்** பொற்பை
4.**பீட்டர ஜோசப்** – சென்னை
5.**சுதா ராஜா** – சென்னை
6.**டோம்னிக் பெனிட்டா** கவரப்பேட்டை
7. J.**சேசுதுரை ஜென்ஸி** கவரப்பேட்டை
8. S. **மேரி லீலா,** - பொற்பை
9.J.**ஜெபி ஜோஸ்** – கடகுளம்
10.J.**பெரிலின்கனி ரோஸ்** அந்தியூர்
11 A.**லில்லி தெரஸ்** அந்தியூர்
12.J.**டின்ஸி** – அந்தியூர்
13.**சுந்தர செல்வன்** – நுள்ளி விளை
14.**பிரின்ஸஸ் ஜேம்ஸ்** – பொற்பை
15.**ரெஜினாள் மேரி** – பொற்பை
16.**கபிரியேல் மேரி** – பொற்பை
17.**ஜோஸ் பிரகாஷ்** – பொள்ளாச்சி
18.S.M.V.**ராஜா** – கொழுந்தட்டு
19.**ஜெனபா ராணி** – சென்னை
20. **சீரோன்பாலன்** – பொற்பை
21.**குயின்ரோஸ் பாக்கியம்** – பொற்பை
22.M.**ஆகாஷ் துரை** – வெள்ளக்கோவில்
23.**சந்தனத் திரவியம்** – பொற்பை
24.**டேவிட் தேவராஜன்** – வெள்ளக்கோவில்
25.**டென்சன் ஜாக்குலின்**– வெள்ளக்கோவில்
26.**ஜெப ஆஷா** - வெள்ளக்கோவில்
27. **அருள்தெரஸ் ஷாலினி**–செங்கல்பட்டு



# கிச்சன் கார்னர்

## விருதுநகர் சிக்கன் ரோஸ்ட்

சமையலானது ஒவ்வொரு மாவட்டத்திலும், சுவையிலும் தயாரிப்பிலும் மாறுபட்டு சுவைக்க மிகவும் ஏற்றதாக உள்ளது. குறிப்பாக செட்டி நாட்டு சமையல், தஞ்சாவூர் சமையல், வாணியம்பாடி சமையல் போன்றவை குறிப்பிடத்தகுந்தவையாம். அதிலும் விருதுநகர் சமையலுக்கு அகில இந்திய புகழ் உண்டு எனவே விருதுநகர் பாணியில் சிக்கன் ரோஸ்ட்

**தேவையான பொருட்கள்:**

கோழிக்கறி - 1 கிலோ , சிறிய வெங்காயம்-250கிராம், நாட்டுத்தக்காளி-250 கிராம், பூண்டு-25கிராம்,இஞ்சி-25கிராம், மிளகாய் தூள்-2 மேஜைக்கரண்டி, சோம்பு-20கிராம் அரைக்க, சீரகம்-10 கிராம் அரைக்க, மல்லித்தூள்-1 மேஜைக்கரண்டி, மஞ்சள்தூள்-தேவைக்ற்ேப,பட்டை,கிராம்பு,சாதிக்காய்-25கிராம், தேங்காய் எண்ணெய், உப்பு

**செய்முறை :**

வாணலியை அடுப்பில் வைத்து தேவையான எண்ணையை ஊற்றவும், எண்ணை நன்றாக காய்ந்ததும் சோம்பு,பட்டை,கிராம்பு அனைத்தையும் போட்டு தாளிக்கவும். பிறகு நறுக்கிய சிறிய வெங்காயம்,தக்காளி,இஞ்சி,பூண்டு விழுது அனைத்தையும் வாணலியில் உள்ள எண்ணையில் சேர்த்து நன்கு கிளறவும். இதன்பின் இரண்டு ஸ்பூன் மிளகாய்த்தூள், 1 மேஜைக்கரண்டி மஞ்சள்தூள் கொஞ்சம் சீரகத்தூள், சோம்புத்தூள் அனைத்தையும் அதில் போடவும்.

இனி வெட்டிய கோழிக்கறியை அதில் போட்டு கிளறவும்.உப்பைத் தேவையான அளவில் போட்டு, 1 டீஸ்பூன் மிளகுத்தூள் சேர்த்து புதினா தழையைச் சிறிதாக நறுக்கி மேலே தூவி இறக்கிவிட்டால் சுவையான விருதுநகர் சிக்கன் ரோஸ்ட் ரெடி. உண்டு மகிழுங்கள்.

- ஸ்டீபன் காவை நீலவண்ணன்

---

## மறைவட்டத்தில் மறைமாவட்ட நாள்

05.01.2013 அன்று குறுக்குச்சாலை மறைவட்டத்தில் விளாத்திக்குளத்தில் வைத்தும் 06.01.2013 அன்று சாத்தான்குளம் மறைவட்டத்தில் சாத்தான்குளத்தில் வைத்தும்,12.01.13 அன்று மணப்பாடு மறைவட்டத்தில் அடைக்கலாபுரம் அறநிலையத்தில் வைத்தும்,13.01.13 அன்று வடக்கன்குளம் மறைவட்டத்தில் கள்ளிக்குளத்தில் வைத்தும்,19.01.13 அன்று தூத்துக்குடி மறைவட்டத்தில் தூத்துக்குடி நற்செய்தி நடுவத்தில் வைத்தும் மறைமாவட்ட நாள் கொண்டாடப்பட உள்ளது.

- மறைமாவட்ட செய்தி மடல்

# வெற்றி நாயகி



மறை ஞானம் ததும்பும் கல்யாணத்தாயால்
இறை யருள்பெற்று புவியினில் சிறப்புறும்
கறை யில்லா கலங்கரை விளக்காம்
நிறை மாந்தர் வாழும் பொற்பையிலே
மரியின் பூலோக மகிமையை – வான்
பிதாவும் கைத்தட்டி ரசிக்குமிடம் பொற்பை!
மங்களத் தாய்க்கு மங்கல வாத்தியம் முழங்க
மலர்மணம் கமழ வீதியில் தேரோட்டம்!
ஓர் நூற்றாண்டு கடந்து நிற்கும்
ஓய்யார அழகு மயிலாம் தேரில்
வெற்றி நாயகி திருக்கல்யாணத்தாயின்
வெற்றி பவனி கண்டு நிறையாசீர் பெறுவோம்!

– ம.ரூபி.அனன்ஸியா, Tr. திருச்சி.

**1.இந்தியாவில் முதல் வேதசாட்சி!**
**இந்தியப் பொதுநிலையிலிருந்து முதல் புனிதர்!**
**அருளாளர் தேவசகாயம் பிள்ளை**

ஜனவரி 14,1762 அன்று குமரி மாவட்டக் காற்றாடி மலையில் கொடூரமாகக் கொல்லப்பட்ட முதல் இந்திய வேதசாட்சி, பாதுசிலையிலிருந்து முதல் இந்தியப் புனிதர்

தேவசகாயம் பிள்ளையின் அருளாளர் பட்டமளிப்பு விழா டிசம்பர் 2,2012 அன்று திருத்தந்தையின் பிரதிநிதியாக புனிதர் பட்டமளிப்பு பேராயத் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ தலைமையில் கோலகலமாகக் கொண்டாடப்பட்டது. இறை நம்பிக்கை ஆண்டில் இந்தியாவிலிருந்து ஒரு பொது நிலையினர் 'அருளாளர்' பட்டத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது இந்தியக் கிறிஸ்தவர்கள், தமிழக கத்தோலிக்க மக்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தில் ஆழப்பட, வேர் ஊன்ற பெரும் உந்துசக்தியாக இருக்கும்.

**2. சென்னை மயிலை உயர் மறைமாவட்டத்திற்கு 6வது புதிய பேராயராக டாக்டர் ஜார்ஜ் அந்தோணிசாமி பொறுப்பேற்பார் – திருத்தந்தை**

மேற்கு ஆப்பிரிக்காவின் காம்பியா, லிபேரியா. சியாரா லியோன் ஆகிய நாடுகளுக்கான திருத்தந்தையின் வத்திக்கான் திருப்பீடத் தூதரான மேதமிகு பேராயர் டாக்டர் ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்களை சென்னை-மயிலை உயர் மறைமாவட்டத்தின் புதிய பேராயராக திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் நியமித்துள்ளார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு அவ்விட நேரம் 21-11-2012 பிற்பகல் 12 மணிக்கு (இந்திய நேரம் மாலை 4.30 மணிக்கு) வத்திகானில் வெளியிடப்பட்டது. பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்கள் பழம்புகழ் வாய்ந்த ஒன்றிணைந்த சென்னை-மயிலை உயர் மறைமாவட்டத்தின் ஆறாவது பேராயராகப் பொறுப்பேற்க உள்ளார்.

உங்கள் பொருட்டு கடவுளுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்த
நாங்கள் கடமை பட்டுள்ளோம் (2தெச 1:3)

# பெற்றோரின்
# நினைவஞ்சலி

**இறைவனில் இணைந்த**

| | |
|---|---|
| 15-ம் ஆண்டு (09.03.1997) | 7-ம் ஆண்டு (08.01.2006) |
| **அ.அமலோற்பவம்** | **அந்தோணிதாசன்** |

அன்பால் உயிர்கொடுத்து
பண்பாய் பேணிகாத்து
பொறுமையாய் வளர்த்தெடுத்து
உழைப்பாய் உயரவைத்து
புன் முறுவலாய் வேதனைகளை சுமந்து
இயேசுவின் பாடுகளில் பங்கேற்று
தியாகத்தால் கரைந்து எம் வாழ்வில் ஒளி ஏற்றி
எமக்காய் உயரளித்த உத்தம தியாகிகளே!
நீங்கள் கடவுள் அளித்த மாபெரும் கொடை
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
அழியாது உங்கள் அன்பு பாச உணர்வு
நீங்கள் விட்டுச்சென்ற
பாத அடிச்சுவட்டை என்றும் மறவோம்.
உணர்வால் என்றும் எம்மை வலம் வந்து
உறையாடி கொண்டிருக்கும் நீங்கள்
இறைஞ்சுவீர்கள் உம்மக்களுக்காய்

என்றும் உங்கள் நினைவில் வாழும்

**அன்பு மக்கள், மருமகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

## புழமொழி

1.அமைதி இருக்கும் இடத்தில்
தெய்வம் இருக்கும்.
2.உலகில் மௌனம் தான்
மிகப்பெரிய ஆயுதம்
3.அன்பின் பிறப்பிடம்
அன்னை
4.இன்றைய பணியை
இன்றே செய்வோம்,
5.கடவுளை அறிவது தான்
உண்மையான அறிவு

M.**ஆகாஷ்துரை**
வெள்ளக்கோவில்

## தெரிந்து கொள்ளுங்கள்

1.உடலில் மிகவும் குளிர்ச்சியான பகுதி
- மூக்கின் நுனி
2.உடம்பில் காணப்படும் மிகப்பெரிய செல்
- நரம்புசெல்
3.நமது நாக்கில் சுவை நரம்புகள்
- மூவாயிரம்
4.நமது உடலில் நீளமான எலும்பு
- தொடை எலும்பு
5.நமது உடலில உறுதியான எலும்பு
- தாடை எலும்பு
6.நமது உடலில்உள்ள உணவு குழலின் நீளம்
- 30 அடி
7.நமது உடலில் உள்ள எலும்புகளின் எடை
- 9கிலோ கிராம்.

**டெ.மைக்கிள் ரோஜர்சன்**
வெள்ளக்கோவில்

## காய்களும் அதன் மருத்துவ குணங்களும்

1. கேரட் - கண்களுக்கு வலிமை தரும்
2.பீட்ரூட் - இரத்த அழுத்தத்தை சீர் செய்யும்
3.முட்டைகோஸ் - சிறுநீரக கோளாறுகளை சரி செய்யும்.
4.வெள்ளரிக்காய் - தாகம் தணிந்து புத்துணர்ச்சி உண்டாகும்.
5.முருங்கைக்காய் - இருதயத்தை வலுப்படுத்தும்.
6.முள்ளங்கி - மூலநோய் நீங்கும்
7.கத்தரிக்காய் - இருமலுக்கு நல்லது.
8.வெங்காயம் - இருதய நோய் நீங்கும்.
9.கொத்தவரங்காய் - மாலை கண் நோயை குணப்படுத்தும்
10.வெண்டைக்காய் - ஞாபகச் சகதியை மேம்படுத்தும்.
11.பூசணிக்காய் - உடல் பருமனை குறைக்கும்.
12.புடலங்காய் - குடலை சுத்தப்படுத்தும்
13.சௌசௌ - வாய்புண்,தொண்டைபுண் சரியாகும்.

**டெ.ஜெசிகா ரெஜீலின்**- வெள்ளக்கோவில்

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 31.10.12 அன்று இருப்பு | 1,57,404.00 |
| 01.11.12 முதல் 30.11.12 வரை விற்பனை | 1,25,719.00 |
| மொத்தம் | 2,83,123.00 |
| 01.11.12 முதல் 30.11.12 வரை செலவு | 1,46,561.00 |
| 30.11.12 அன்று இருப்பு | 1,36,562.00 |
| ரீப்ளேஸ்சன் ஸ்டுடியோ பில் கழிவு மூலம் வரவு | 7,500.00 |
| 30.11.12 அன்று இருப்பு | 1,44,062.00 |

- **திருத்தலக்கடை நிர்வாகிகள்**




# நன்றிகளை அர்ப்பணிக்கிறேன்

1. முதல் சனி நன்கொடையாளர்கள் உபயதாரர்களுக்கு **நன்றி!**

2.ஆலய சுற்றும் சுவரின் ஒளி விளக்குகள் அர்ப்பணித்த குடும்பங்களுக்கு **நன்றி!**

3.பல இலட்சம் பொருட்செலவில் மாபெரும் கிறிஸ்மஸ் குடில் அமைத்து நமது பங்கின் புகழைப் பரப்பும் திரு.எட்வின் காமராஜ் குடும்பத்தாருக்கு **நன்றி!**

4.ஆலயமுன் வாசல் பகுதியில் கிரில்கள் அமைத்தும் பீட பூந்தொட்டிகள் செய்தும் ஆலயத்தைச் சுற்றி தேர் ரத வீதி முழுவதும் கிறிஸ்மஸ் ஸ்டார் அமைத்து ஒளிரச் செய்த திரு.எட்வின் காமராஜ் குடும்பத்தாருக்கு **நன்றி!**

5.ஆலயம் மற்றும் ஆலய வளாக பாதுகாப்பிற்காக கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்த (9கேமராக்கள்) 70 ஆயிரம் உதவி செய்து மேலும் அன்னையின் தேரில் பொருத்த 12 போர்டுகள் ரூபாய் 40ஆயிரம் உதவிய திரு.சந்தன திரவியம் குடும்பத்தாருக்கு **நன்றி!**

6.ஆலய வளாகத்தில் குடிநீர் தொட்டி அமைக்க உதவிய திரு.ஜஸ்டின் டி பிரிட்டோ குடும்பத்தாருக்கு **நன்றி!**

7.கல்லறைத் தோட்டம் சுற்றுச் சுவர் பெயிண்டிங் மற்றும் இரு அழகிய சம்மனசு சுருபங்கள் அமைத்து தந்த குடும்பத்தாருக்கு **நன்றி!**

8. திருக்கல்யாண அன்னையின் படம் போட்ட தினசரி காலண்டர்கள்1500 பங்கிற்கு வழங்கிய திரு. ஜோசப் செல்வராஜ், திருக்கல்யாண மாதா ஏஜென்சீஸ், ஈரோடு அவர்கள் குடும்பத்தாருக்கு **நன்றி!**

– **பங்குத்தந்தை**

புனிதர்களின் பாதையில் :

# புனித செபஸ்தியார்

புனித செபஸ்தியார் உரோமை இராணுவத்தில் உயர் பதவி வகித்தார். கிறிஸ்தவர்களை ஊக்குவித்து வந்தார். கிறிஸ்துவுக்காக உயிரை இழப்பது பெரும் பேறு என்பார். இவர் பல புதுமைகள் செய்தமையால் பலர் கிறிஸ்தவராயினர். வேத கலகத்தின் போது கிறிஸ்தவர்கள் உரோமையை விட்டு தப்பித்து ஓட இவர் உதவி செய்தார். இவரைப் பிடித்துக்கட்டி அம்புகளை இவர் மீது எய்தார்கள். இவர் இறந்து விட்டார் எனக் கருதி இவரை விட்டுச் சென்றனர். இவரோ சாகவில்லை. தம்மைக் கொல்ல உத்தரவிட்ட நடுவனிடம் இவர் போய் "தயவு செய்து இயேசுவை விசுவாசியுங்கள்" எனச் சொன்னார். அவனோ தடிகளால் செபஸ்தியாரை அடித்துக்கொல்ல உத்தரவிட்டான்.

***சிந்தனை:–***

இயேசுவுக்கு சொந்தமானவர்களை பறிக்க சாத்தான் பெரும் முயற்சி செய்கிறான். அவர்களை சாத்தானிடமிருந்து பறித்து இயேசுவுக்கு திரும்ப கொடுக்க சிரமத்தைப் பாராமல் நாம் உழைக்க வேண்டும். (புனித செபஸ்தியார்)

**செபம்:–** ஆண்டவரே,சிறந்த இராணுவவீரர்களை எங்கள் நாட்டுக்கு தந்தருளும்.

**நன்றி – தூயவர்களின் வரலாறு**

## "திருக்கல்யாணத்தாய்" சந்தாதாரர்களுக்குளர் அன்பான நினைவூட்டல்

"**திருக்கல்யாணத்தாய்**" மாத இதழின் சந்தாதாரர்களில் பெரும்பாலான சந்தாதாரர்கள் டிசம்பர் மாதத்துடன் முடிவடைவதால் தாங்கள் தங்கள் சந்தாக்களை ஜனவரி முதல் புதுப்பிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம். சந்தாதாரர்கள் தங்களின் சந்தாவினை புதுப்பிக்க வரும்போது தங்களுடைய முகவரியோடு இணைக்கப்பட்டுள்ள பதிவு எண்ணையும் எடுத்துவரும்படி கேட்டுக்கொள்கிறோம். சந்தாவை புதுப்பிக்காதவர்களுக்கு மாத இதழ் அனுப்புவது நிறுத்தப்படும்.

**திருக்கல்யாணத்தாய் மாத இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்.**

தொடர்புக்கு : **பங்குத் தந்தை**

**திருக்கல்யாண மாதா ஆலயம்**
**பொத்தக்காலன்விளை 628 702 தூத்துக்குடி மாவட்டம்,**
**தமிழ்நாடுதொலைபேசி : 04639 – 261230**

**– பங்குத்தந்தை**

# இதய அஞ்சலி



## எஸ். சுபாஷ் ஜேம்ஸ் ஒயிட்

தோற்றம் 04.10.1982

மறைவு 16.12.2012

### பிரிவால் வாடும்...

**தாய் கிளாரா மேரி அவர்கள்**

**சகோதரர்கள் :**

**யூஜின் ஒயிட்,**

**பெலிக்ஸ் ஒயிட்,**


**தேஜஸ் பிரின்ஸ் ஒயிட்**

### மற்றும் பிரிவால் வாடும் குடும்பத்தார்

பொத்தக்காலன்விளை

# வாழ்வு தரும் வார்த்தைகள் – டிசம்பர் – 2012

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | தூய கன்னி மரியா இறைவனின் தாய் | எண் 6:22-27,கலா 4:4-7 | லூக் 2:16-21 |
| 2. | புனித பெரிய பசிலியார் | 1யோவா 2:22-28 | யோவா 1:19-28 |
| 3. | | 1 யோவா 2:29-3:6; | யோவா 1:29-34 |
| 4. | புனித எலிசபெத் அன்செயோன் | 1யோவா- 3:7-10 | யோவா 1:35-42 |
| 5. | ஜான் நியூமன் –ஆயர் | 1யோவா 3:11-21 | யோவா 1:43-51 |
| 6. | ஆண்டவரின் திருக்காட்சி | ஏசா 60:1-6,எபே 3:2-3a 5-6 | மத் 2:1-12 |
| 7. | புனித ரேய்மண்ட் பென்யபோர்ட் | 1யோவா 3:22-4:6 | மத் 4:12-17,23-25 |
| 8. | | 1யோவா 4:7-10 | மாற் 6:34-44 |
| 9. | புனிதர்கள் ஜுலியன் பசிலிஸ்ஸா | 1யோவா 4:11-18 | மாற் 6:45-52 |
| 10. | புனித விவிலியம் | 1யோவா 4:19-5:4 | லூக் 4:14-22 |
| 11. | | 1யோவா 5:5-13 | லூக் 5:12-16 |
| 12. | | 1யோவா 5:14-21 | யோவா 3:22-30 |
| 13. | ஆண்டவரின் திருமுழுக்கு | ஏசா 40;1-5,9-11 | |
| | | தீத் 2:11-14;3:4-7 | லூக் 3:15-16,21-22 |
| 14. | **திருவிழா கொடியேற்றம்** | எபி 1:1-6 | மாற் 1:14-20 |
| 15. | வனத்துறவி புனித பவுல் | எபி 2:5-12 | மாற் 1:21-28 |
| 16. | | எபி 2:14-18 | மாற் 1:29-30 |
| 17. | | எபி 3:7-14 | மாற் 1:40-45 |
| 18. | புனித பிரிஸ்கா,லிபரட்டா | எபி 4:1-5,11 | மாற் 2:1-12 |
| 19 | புனித கன்யூட் | எபி 4:12-16 | மாற் 2:13-17 |
| 20 | ஆண்டின் ஞாயிறு 2 | ஏசா 62:1-5 | 1கொரி 12:4-11 |
| | | | யோவா 2:1-11 |
| 21. | புனித அக்னேஸ் | எபி 5:1-10 | மாற் 2:18-22 |
| 22. | புனித வின்சென்ட் | எபி 6:10-20 | மாற் 2:23-28 |
| 23. | **திருக்கல்யாணமாதா திருவிழா** | எபி 7:1-3,15-17 | மாற் 3:1-6 |
| 24. | புனித பிரான்சிஸ் சலேசியார் | எபி 7:25-8:6 | மாற் 3:7-12 |
| 25. | புனித பவுலின் மனமாற்றம் | திப 22:3-16 or | மாற் 16:15-18 |
| 26. | புனிதர்கள் திமொத்தேயு தீத்து | எபி 9:2-3,11-14 | மாற் 3:20-21 |
| 27. | ஆண்டின் ஞாயிறு 3 | நெகே 8:2-4a ,5-6,8-10 | 1கொரி 12:12-30 |
| | | | லூக் 1:1-4;4:14-21 |
| 28. | புனித அக்குவின் தோமா | எபி 9:15,24-28 | மாற் 3:22-30 |
| 29, | புனித கில்டாஸ் | எபி 10:1-10 | மாற் 3:31-35 |
| 30. | | எபி 10:11-18 | மாற் 4:1-20 |
| 31. | புனித ஜான் போஸ்கோ | எபி 10:19-25 | மாற் 4:21-25 |



# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி**
**இறைவாக்கினர் புத்தகங்கள்**
**செக்கரியா அதிகாரம் 8 –14,**
**மலாக்கி அதிகாரம் 1 –4,**
**தோபித்து அதிகாரம் 1 –14,**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.1.2013**

## இடமிருந்து வலம்

1. உண்மையுள்ள நகர் எது?
5.அசீரியாவின்..................... அடக்கப்படும்
9.உங்கள் கையிலிருந்து ................. எதுவும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்
13.இரகுவேலின் மகன் யார்?
17.நப்தலியின் மக்கள் எந்த நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டார்கள்?
21.நலம்.....................மகிழ்ச்சி ஆகிய அனைத்தும் என்னோடு வருக.

## வலமிருந்து இடம்

2 ...........தன்னைச் சுற்றிலும் அரண் ஒன்றைக் கட்டி எழுப்பியது.
6. இரண்டாவது கோலுக்கு இடப்பட்ட பெயர் என்ன?
10.ஆண்டவர் எதை வெறுக்கிறார்?
14........................செய்யத் தயங்காதே.
18.இரகுவேலின் மனைவி யார்?
22.எருசலேமின் வாசல்களில் என்ன இசைக்கும்?

## மேலிருந்து கீழ்

3 யாருடைய ஆணவத்தை ஆண்டவர் ஒழிப்பார்?
7.கூலியாகக் கொடுக்கப்பட்ட வெள்ளிக் காசுகள் எத்தனை
11அனனியேலின் அன்னை யார்?
15.பஞ்சத்திற்கு காரணம் எது?
19.உன்.....................இனிதே அமையட்டும்.
23.நினிவேக்கு எதராக எந்த இறைவாக்கினர் வழியாக வாக்கு கூறப்பட்டது?

## கீழிருந்து மேல்

4.வீணானதையே கூறுபவை எவை?
8.ஆண்டவரது கோவிலில் ................எவரும் இருக்கமாட்டார்?
12சனகெரிபுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர் யார்?
16. அனனியாவின் மகன் யார்?
20. என் வாழ்நாளெல்லாம் உங்களை மதிப்பதே என்.................

## திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு செபமாலை , 10.15 மணி முதல் 11.30 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடுஅதனைத் தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். மாலை சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெறும். மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.00 மணிக்கு நவ நாள் திருப்பலியும் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலை திருப்பலி.
- மாதத்தில் முதல் புதன் ஆலய கெபியில் மாலை திருப்பலி.
- மாதத்தில் இரண்டாவது புதன் நான்கு சந்தி கெபியில் மாலை திருப்பலி.
- மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்.
- மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.
- மாதத்தின் முதல் சனி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும்.

### இணையூர் வழிபாடுகள்

**கொழுந்தட்டு**

- வாரம் ஒருமுறை ஞாயிறு திருப்பலி மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலி நடைபெறுகிறது.

**நவமுதலூர்**

- வாரத்திற்கு ஒருமுறை திருப்பலி நடைபெறுகிறது.

**வாலத்தூர்**

- மாதத்திற்கு ஒருமுறை திருப்பலியும் தேவைக்கேற்ப மற்ற நாட்களில் திருப்பலியும் நடைபெறுகிறது.

### அடுத்த இதழ்

2013 பெப்ருவரி மாத இதழ் பாலர் சபை திருவிழா, மற்றும் லூர்து மாதா திருவிழா, அன்னையின் திருவிழா நிகழ்வுகள் பற்றிய கட்டுரைகள், கவிதைகள் வரவேற்கப்படுகின்றன படைப்புகள் எங்களை வந்து...

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-01-2013**

சந்தாதாரராக ஆகுங்கள் ! அன்னையின் அருள் பெறுங்கள் !


திருமண வரம் தரும்
திருக்கல்யாண மாதா திருத்தலம்
பொத்தக்காலன்விளை